# அப்பலோ - 13 பயணம் பின்போடப்படுமா?

Registered as a NewsPaper in Ceylon     விலை சதம் 15 ★★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 57
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 26     ஏப்ரல் 1     புதன்கிழமை [8-4-70]

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு
யுனிக் – நாஷனல்
றேடியோக்கள்
விலை வெகுவாகக்
குறைக்கப்பட்டுள்ளன.
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கணேசன் ஸ்ரோர்ஸ்
ஸ்தாபனத்தார்
உங்களை அன்புடன் அழைக்கின்றனர்
புத்தாண்டு ஜவுளிகளை
தெரிவு செய்ய
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
கணேசன் ஸ்ரோர்ஸ்
78, 63, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7169

## விஞ்ஞானிகளுக்கு புதியபிரச்னை

கென்னடிமுனை, ஏப். 7

அப்பல்லோ-13 சந்திரப் பயணம் திட்டமிட்டபடி குறித்த நாளில் இடம் பெறுமா என்ற கேள்வி இப்பொழுது எழுந்துள்ளது.

அப்பலோ -13 சந்திரனை நோக்கி செலுத்தப்படும் திகதி ஒருவாரகாலத்துக்குப் பின்போடப் படக்கூடும் என்று இப்போழுது கருதப் படுகின்றது.

அப்பலோ-13 கலத்தில்சந்திரனை நோக்கி அனுப்பப் படவிருந்த மூன்று வீரர்களுக்கும் சின்னம்மை ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம். 'ஜெர்மன் மிஸில்ஸ்' என்றழைக்கப் படும் சின்னம்மை கண்ட ஒரு நபருடன் இவர்களுக்கு தொடர்பு ஏற்பட்டதால் அந்த நோய் இவர்களுக்கும் தொற்றியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இக்காரணமாக திட்டமிட்டபடி அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று அப்பலோ -13 செலுத்துவதை ஒருவார காலத்துக்குப் பின்போடுவதாஎன்பதுபற்றி நாளையதினம் விஞ்ஞானிகள் கூடி ஆராயவிருக்கிறார்கள்.

அப்பலோ-13 கலத்தின் எரிபொருள் அழுத்தப்பகுதியில் ஏற்பட்ட கோளாறு ஒன்றும் ஏற்கனவே விஞ்ஞானிகளுக்கு சில பிரச்னைகளை ஏற்படுத்தியிருக்கின்றதுஇத்தக் கோளாறுதிருத்தப்படக் கூடியதே என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அப்பலோ-13 செலுத்தப் படுவது ஒத்திப்போடப் படுமா இல்லையா என்பது நாளையதினம் தெரியவரும்.

# கள்ளக் கடத்தல் செய்வோர் வெளிநாடு செல்லமுடியாது

## பாஸ்போர்ட் வழங்கப்படுவது பற்றி அரசாங்கம் ஆலோசனை

### சந்தேகநபர்களின் பட்டியல்கள் தயாராகின்றன

யாழ்ப்பாணம், புதன்

கள்ளக்கடத்தல்காரர்கள் எனக் கண்டுபிடிக்கப்படும் இலங்கையரின் வெளிநாடு செல்வதற்கான பாஸ்போர்ட்டுகளை ரத்துசெய்வது பற்றியும் கள்ளக்கடத்தல் காரர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களுக்கு 'பாஸ்போர்ட்' வழங்காமல் விடுவது பற்றியும் அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.

இவ்விஷயமாக நீண்ட காலமாக ஆலோசனை இருந்துவந்த போதிலும் தற்பொழுது அதனைசெய [illegible] டுத்துவதற்கான ஆரம்ப முயற்சிகள் [illegible] ளன. [illegible] ளுக்கு பாஸ்போர்ட்வழங்கா [illegible] மூலம் பலன் [illegible] என்பது பற்றி கள்ளக்கடத்தல்காரர்க [illegible] இரகசிய பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை செய்துவரு [illegible]

## சட்டநூல்களை தமிழிலும் மொழிபெயர்க்கவேண்டும்

### மாநகரசபைக்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், புதன்

சட்ட நூல்களை தமிழிலும் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்து தரவேண்டுமென பிரதமரை கேட்டுக் கொள்ளும் பிரேரணையொன்று இம்மாதம் 16-ம் திகதி நடைபெற விருக்கும் யாழ்ப்பாணம்மாநகரசபைக் கூட்டத்தில் கொண்டுவரப் படவிருக்கிறது.

மேயர் திரு ரி.எஸ். துரைராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு எஸ். ஜே. அன்ரனியினல் கொண்வரப்படவிருக்கும் அப்பிரேரணையில் கூறப்பட்டிருப்பதாவது; சட்டத்துறை நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படுவதை [illegible] மக்கள் பெரிதும்கஷ்டமடைகின்றனர். சட்ட நூல்களை சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள கல்வி திணைக்களம் தமிழில் ஒன்றையாவது மொழிபெயர்க்க நடவடிக்கை எடுக்காதிருப்பது மிக மிக கவலைக்குரிய விஷயமாகும். ஆகவே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் ஒரு தமிழ்பிரிவை உடனே நிறுவிச் சட்ட நூல்களை தமிழிலும் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்துதர வேண்டும் என்று பிரதமரையும் கல்வி நிதி அமைச்சர்களையும் இச்சபை கேட்டுக் கொள்கிறது.

இக்கூட்டத்தில் மற்றும் 3 பிரேரணைகள் கொண்டு [illegible]

## பிலிப்பைன்ஸில் பயங்கர பூகம்பம்!

மணிலா, ஏப். 7

பிலிப்பைன்ஸில் பயங்கரபூகம்பம் ஏற்பட்டது பூகம்பத்தின் விளைவாக 3பேர் இறந்துவிட்டதாகவும் 50 பேர்காயப்பட்டிருபபதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிலாவில் கட்டிடங்கள் சில சேதமடைந்துள்ளன. சிலகட்டடங்கள் ஆடிக் கொண்டிருக்கின்றன. வீதியில் கட்டடங்களுக்கு அருகாமையால் செல்ல வேண்டாமென மக்கள் கேட்கப்பட்டுள்ளன. ஒருபாடசாலைக் கட்டிடம் முற்றாகவே சேதமடைந்துள்ளது.

## 'வீரமாமுனிவருக்கு விழா எடுத்தல் அவசியம்'

### முசலி காரியாதிகாரி

முசலி, செவ்வாய்

தமிழ் மண்ணிலே பிறவாமல், தமிழ் இரத்தத்தில் ஊறாமல், தமிழ் சூழலில் பழகாமல் தனது முப்பதாவது பராயத்தில், தமிழ் கற்று தமிழில் பெருங்காப்பியங்களாகிய சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரத்தையொத்ததும், சிலவிடயங்களில் கம்பராமாயணத்தையொத்ததுமாகிய தேன் தமிழ் தேம்பாவணியை எமக்களித்த இத்தாலி நாட்டின் வெனிஸ்பகுதி தந்த வீரமாமுனிவருக்கு விழா எடுப்பது ஒவ்வொரு தமிழ் மகனின் கடமையாகும். இதனால்தான் சென்னை மாநகரில் நடந்த உலகத்தமிழாராய்ச்சிமகாநாட்டில்மெரினா கடற்கரையில் வீரமாமுனிவர் என்றழைக்கப்படும் யோசவ் கொன்ஸ்தந்தீன் பெங்கி என்பவருக்கு சிலை எடுத்தார்கள்.

இவ்வாறு முருங்கனில் மாதோட்டத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ, கத்தோலிக்க மக்களால் எடுத்த வீரமாமுனிவர் விழாவின் போது முசலிக் காரியாதிகாரி திரு. வை. சொக்கலிங்கம் கூறினார்.

இவ்விழாவில் திரு. எவ். எக்ஸ். சி. நடராஜா, இலங்கை சலுசலா கணக்காளர் திரு. பி. சூசைதாசன், வித்துவான் க. அடைக்கலமுத்து, அருட்திரு அம்பலவாணர், அருட்திரு ஜெயராசசிங்கம் ஆகியோர் பேசினார்கள்.

விழா முடிவில், [illegible]

குருநகர் வீடமைப்புத்திட்டம்

## தேசிய இளைஞர் சேவையின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், புதன்

குருநகர் வீடமைப்புத் திட்டத்துக்கென குருநகர் மீன்பிடித் துறைமுகத்தை நிரப்புவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. சுமார் கால் மைல் தூரத்துக்கு அப்பாலிருந்து இதற்கான கல், மண் [illegible] தீவிரமாக நடைபெறுகின்றன:

யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த இயக்கத்தில் மேலும் பல இளைஞர்களை சேர்ப்பதற்கான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (கு. வி. ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினுல் கொண்வரப்படவிருக்கும் அப்பிரேரணையில் கூறப்பட்டிருப்பதாவது; சட்டத்துறை நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படுவதை அரசாங்கம் தாமதிப்பதால் சட்டம்பயிலுந் தமிழ்பேசும் ...யும் கல்வி நிதி அமைச்சர்களையும் இச்சபை கேட்டுக் கொள்கிறது.

இக்கூட்டத்தில் மற்றும் 3 பிரேரணைகள் கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம்பஸ் சாரதிகொலை

# பொலிஸ் விசாரணை இன்னும்முடியவில்லை?

யாழ்ப்பாணம், புதன்

கொடிகாமம் பஸ்சாரதி கொலை பற்றிய பொலிஸ் கோஷ்டியினரின் விசாரணை இன்னும் முடிவடையவில்லையென பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

சந்தேகநபர்களான தம்பிமுத்து கணேசமூர்த்தி, சின்னத்தம்பி திரவியநாயகம், முருகேசு கணேசமூர்த்தி ஆகிய மூவரும் இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்படுவார்கள்.

இக்கொலை சம்பந்தமாக இருகார்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். கார் சொந்தக்காரர் ஒருவரை பொலிசார் தேடிவருகின்றனர்: கொடிகாமப் பகுதியை சேர்ந்த சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை யொட்டி அச்சுவேலியை சேர்ந்த ஒருவரையும் லொறி ஒன்றையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

குடத்தனை கொலை வழக்கு

## ஆறு எதிரிகளும் தொடர்ந்து றிமாண்டில்

வல்வெட்டித்துறை, செவ்

பருத்தித்துறை குடத்தனையைச் சேர்ந்த சின்னக்குட்டி கைம்பெண் வள்ளி என்னும்வயோதிப்பெண்ணை (70வயது) அதே இடத்தைச் சேர்ந்த நா சின்னப்பு, வ ஆறுமுகம், த செல்லத்தம்பி த செல்லக்கிளி கோ கனகன் க தளையசிங்கம் ஆகியோர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

டாக்டர் திரு எஸ் கதிர்காமத்தம்பி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் கிளைப் பெர்ணண்டோ ஆகியோர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் எதிரிகளை தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு மேல்விசாரணையை இம்மாதம் 12ந் திகதிக்கு ஒத்திவைத்தார்,

## ஜீவனும்சம் கட்டாதவருக்கு ஒரு மாதச்சிறை

மட்டுவில், செவ்.

தமக்கும் தமது மூன்று பிள்ளைகளுக்கும் ஜீவனும்சம் கட்டாமல் வேறொரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்துவதாக மனைவி தொடர்ந்த வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் பிரதிவாதிக்கு ஒரு மாதச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

முசுறியைச் சேர்ந்த கிட்டினன் நாகி என்ற 23வயதுப் பெண் தமது கணவன் தம்மையும், தமதுமூன்றுபிள்ளைகளையும் கைவிட்டு விட்டதாகவும் எனவே தமக்கும் பிள்ளைகளுக்கும் ஜீவனும்சம் கட்டுமாறு கிட்டினர் என்பவர் மீது வழக்குத் தொடர்ந்ததையடுத்துபிரதிவாதியை ரூபா 75 ஜீவனும்சம் கட்டும்படி சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னர் தீர்ப்பளித்திருந்தார்.

மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பின்படி பிரதிவாதி ஜீவனும்சம் கட்டத்தவறியதைத் தொடர்ந்து அவருக்கு ஒரு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்விஷயமாக நீண்ட காலமாக ஆலோசனை இருந்துவந்த போதிலும் தற்பொழுது அதனைசெய எபடுத்துவதற்கான ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

கள்ளக்கடத்தல்காரர்களுக்கு பாஸ்போர்ட் வழங்காமல் விடுவதன் மூலம் பலன் கிடைக்குமா? என்பது பற்றி இரகசிய பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை செய்துவருகின்றனர்.

இவ்விஷயமாக நாட்டில் உள்ள பொலிஸ் அதிகாரிகளிடமிருந்தும் இரகசியப் பொலிஸ் பகுதி ஆலோசனை கோரியுள்ளது.

கள்ளக்கடத்தல்காரர் எனச் சந்தேகிக்கப்படுபவர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதிலும் பொலிசார் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது

சேமிப்பு வங்கி

## கூட்டுத்தாபனம் ஆகினுல் ஊழியர் நிலை என்ன?

### தபால் மாஅதிபதி ஆலோசனை

வெள்வத்தை, செவ்

இலங்கை தபாற்தந்திப் போக்குவரத்துத் திணைக்ளச் சேமிப்புவங்கி அரசாங்க கூட்டுத்தாபனமாக்கப்படும் பட்சத்தில் தற்போது தபாற் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் கதி என்ன?என்ற பிரச்னை இப்போது மாதபாலதிபருக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்படி ஊழியர்களைத் தபாலதிபர்- தந்தியாளர் சேவையுடன் ஒன்றிணைப்பதா அல்லது அரசாங்க லிகிதர் சேவைச்சங்கத்துடன் (ஜி.சி.எஸ்.யு) ஒன்றிணைப்பதா என்ற பிரச்னைக்குத் தீர்வு காணும்படி தபால் மாஅதிபர் திரு வேர்ணன் அபறசேகரா தற்போது தமது திணைக்களத்தின் கீழுள்ள சகல தொழிற்சங்கங்களையும் கேட்டுள்ளார்.

தபாற் திணைக்களத்திலுள்ள பெரும்பாலான புதிய எழுது வினைஞர்கள் தாம் தபாலதிபர்கள் சேவையுடன் ஒன்று சேர்வதையே விரும்புகின்றனரென்றும் பழைய ஊழியர்கள் மட்டும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்துடன் சேர விரும்புகிருர்கள் என்றும் தொழிற்சங்கப் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

மேற்படி பிரச்னைகள்பற்றி ஆராய்வதற்காக 'தபால் தெபாத்து மேந்துவே விபிகரு சங்கமய' சமீதத்தில் புதிய நகரசபை மண்டபத்தில் கூடியது. அஞ்சல் எழுதுவினைஞர் சங்கமும் தனது உறுப்பினர்களிடம் ஆலோசனை கோரியுள்ளது.

## "சேவை செய்யவே நான் இருக்கிறேன்!"

### துரையப்பா கூறுகிறுர்

யாழ்ப்பாணம், புதன்

''இன்று உங்கள் மத்தியில் சேவைக்காகவும், சேவை செய்வதையே ஒரு நோக்காகவும் கொண்ட தனிமனிதன் நான் ஒருவனே என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.''என்று யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. அல்பிரட் துரையப்பா கூறினுர்.



பண்டியந்தாழ்வு வட்டாரத்தில் இவரது சார்பில் பொதுமக்களால் நிறுவப்பட்ட தேர்தற் கந்தோர் ஒன்று இளைப்பாறிய தபால் மா அதிகாரி திரு. சோமசுந்தரத்தின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டபோது பேசுகையில்தான் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:-

''உங்கள பிரதிநிதிகளாகச் சென்றவர்கள் கடந்த ஐந்தாண்டு காலத்தில் என்ன நன்மைகள்செய்தார்கள் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும்: மக்கள் தீர்மானத்தை மாற்ற இந்த மாநிலத்தில் ஒருவராலும் முடியாது. இந்தப் பொதுத்தேர்தலில் வெற்றி எனக்கே என்பதை நான் எனது வாக்காளப் பெருமக்களின் முகங்களைப் பார்த்தே கூறக்கூடியதாக இருக்கிறது,

கச்சேரிச் சந்தியிலிருந்து திரு. அல்பிரட் துரையப்பாவை மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

இக்கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர் காதர், இராஜசூரியர், பேரம்பலம், மனோகரன், ஓவசியர் சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

## மழையினுல் பிரசாரம் தடை

யாழ்ப்பாணம், புதன்

கடந்த இரண்டு தினங்களாக யாழ்ப்பாண பகுதியில் பெய்த மழையினுல் தேர்தல் பிரசார வேலைகள் தடைப்பட்டுள்ளது.

வீட்டுக்கு வீடுசென்று ஆதரவு திரட்டி வந்த அபேட்சகர்கள் கடந்த இரண்டு தினங்களாக பிரசார வேலையில் ஈடுபடவில்லை.

சாவகச்சேரி தொகுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இரு பிரசாரக் கூட்டங்களும் ஊர்வலங்களும் மழைகாரணமாக ரத்து செய்யப்பட்டன.

வடபகுதியில் உள்ள மற்றும் தொகுதிகளிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஆலோசனைக் கூட்டங்களும் மழை காரணமாக ரத்து பெய்யப்பட்டன. — —

### நியமனம்

யாழ்ப்பாணம், புதன்

சமாதான நீதவான் திரு. வி. சுப்பையா- மார்ச். 3-ந்திகதியிலிருந்து மகாதேசாதிபதியால் கைத்தொழில் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்

திரு. சுப்பையா உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் அதிகாரியாகக் கடமையாற்றி வரிமதிப்பாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றவர். இவர் தற்போது அங்கீகரிக்கப்பட்ட பதிவு பெற்ற கணக்கு பரிசோதகராகவும் வருமானவரி ஆலோசகராகவும் கடமையாற்றுகிறுர்.

...நிரப்புவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. சுமார் கால் மைல் தூரத்துக்கு அப்பாலிருந்து இதற்கான கல், மண் முதலியனவற்றை தேசிய இளைஞர் சேவையைச் சேர்ந்த இளைஞர்கள் இங்கு சேர்ப்பிக்கின்றனர்.

200 இளைஞர்கள் வரை வரிசையாக நின்று கற்களையும், மண் கடகங்களையும் கைமாறிக் கொடுப்பதன் மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது 150 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டதாகக் கூறப்படும் பெரிய கட்டிடம் ஒன்றை உடைத்து இதற்கான கல், மண் போன்றவை எடுக்கப்படுகின்றன. தேசீய இளைஞர் சேவை இளைஞர்கள் இவ்வேலைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

மட்டுவில், புலோப்பளை, மருதங்கேணி போன்ற இடங்களிலும், வலிகாமம் வடக்கு, கிழக்கு காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த தேசியஇளைஞர்சேவை இயக்கங்களிலும் வேலைகள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இயக்கத்தில் மேலும் பல இளைஞர்களை சேர்ப்பதற்கான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (கு. வி. ம)

— —

கிரிக்கெட்

## மழையால் ஆட்டம் தடை

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மத்திய கல்லூரிக்கும் கொழும்பு றோயல்கல்லூரிக்குமிடையில் நேற்று யாழ். மத்தியகல்லூரிமைதானத்தில் ஆரம்பமான கிரிக்கெட்போட்டியில் றோயல் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 1விக்கெட்டை இழந்து 40 ஓட்டங்களைப்பெற்ற போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தடைபட்டது மேலும் மழை தொடர்ந்து பெய்ததினுல் நேற்றைய ஆட்டம் முற்ருக கைவிடப்பட்டது.

இன்றைய ஆட்டம் காலை 9 மணிக்குஆரம்பமாகவிருக்கின்றது. (தே. நி)

...திரு. பி. சூசைதாசன், வித்துவான் ச. அடைக்கலமுத்து. அருட்திரு அம்பலவாணர், அருட்திரு ஜெயராசசிங்கம் ஆகியோர் பேசினுர்கள்.

விழா முடிவில், முருங்கன் மகாவித்தியால ஆசிரியர் திரு. அ. இம்மனுவேல் குருஸின் கதாகலாட்சேபமும், முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினரால் வில்லிசையும், முருங்கன் மெதடிஸ்த இளைஞர்களால் 'மனந்திரும்பிய சவுல்' என்னும் நாடகமும்இசமாலைத்தாழ்வு இயல், இசை நாடக மன்றத்தினரால் 'வீரமாமுனிவர் புதையல்' என்னும் நாட்டுக் கூத்தும் நடத்தப்பெற்றன.

விழாவையொட்டி அறிஞர் தனிநாயக அடிகள் உட்பட பல அறிஞர்கள் எழுதிய சிறப்பு மலர் ஒன்று விழாக்குழு வினரால் வெளியிடப்பட்டது.

— —

## தூதுவர் உடல் ஜெர்மனிசெல்லும்

கௌதமாலா, ஏப் 8

கௌதமாலாவில் இடதுசாரிகளால் கடத்திச் செல்லப்பட்டு உயிரிழந்த மேற்கு ஜேர்மன் தூதுவரின் சடலம் நாளை மே. ஜேர்மனிக்கு விமானத்தில் கொண்டு செல்லப்படும்:

மூன்று தினங்களை தேசிய துக்கதினமாக கொண்டாட வேண்டும் என்று கௌத்தமாலா அரசாங்கம் அறிவித்துள்ளது.

தூதுவர்கொலையை ஒட்டி சர்வதேச நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று பலநாடுகளும், பத்திரிகைகளும் வலியுறுத்தியுள்ளன.


## "ஈழநாடு"

### பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

**உதவி வழங்கியோர்:**

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 9,336-07 |
| நவாலியூர் ஸ்ரீ கலைவாணி நாடகமன்றத்தினர் நவாலியூர் மக்களிடமிருந்து வசூலித்து அனுப்பியதொகை | 161-00 |

(விபரம் 2-ம் பக்கம் பார்க்க)


பொம்மை வெளி'யை அரசு பொறுப்பேற்கிறது

# ஏழை முஸ்லிம்களுக்கு யாழ்ப்பாணத்தில் காணி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தின் வடதிசையிலுள்ள 'பொம்மை வெளி'யை அரசாங்கம் பொறுப்பேற்று, இருக்க சொந்தவீடில்லாத வறிய முஸ்லிம் குடும்பங்களுக்கு பிரித்துக் கொடுக்க நடவடிக்கையை மேற்கொள்கிறது.

பொம்மைவெளியிலுள்ள பன்னிரண்டு ஏக்கர் காணியைப்பொறுப்பேற்கும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு காணி நீர்ப்பாசன மந்திரி அறிவித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் காரியாதிகாரிக்கு அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி உத்தரவிட்டுள்ளார்.

தனிப் பட்டவர்களுக்குச் சொந்தமான இந்தக் காணியை அடுத்த மூன்று தினங்களுக்குள் பொறுப்பேற்று வீடில்லாத ஏழை முஸ்லிம்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுமென அரசாங்க செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னுள் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி ஜி. பொன்னம்பலம் இந்த நிலத்தை அரசாங்கம் பொறுப்பேற்று ஏழை முஸ்லிம் குடும்பங்களுக்கு பிரித்துக் கொடுக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தி வந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

C. V. 2900 இலக்கத் தொடர்புள்ள 3 1/2 அந்தர், செலவற்ற லொறி, லோட் மாஸ்றர் மிகவும் நல்ல நிலையில் உடன் விரைவில் விற்பனைக்குண்டு. காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரைபார்வையிடலாம். வின்சிலோஸ், 149. மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம். 2017

3 பரப்பு குடியிருக்கும் நிலம் சிவப்பிரகாசம் றேட்டில் விலைக்கு இருக்கிறது. 35, சிவப்பிரகாசம் றேட்டில் வசிக்கும் ப. இராசரத்தினம், பிறக்டருடன் தொடர்புகொள்ளவும். 2020


## மென்பந்தாட்டப் போட்டி

முசலி. செவ்வாய்

மாந்தைக் காரியாதிகாரி பகுதியில் முதன்முறையாக மென்பந்தாட்டப் போட்டி இம்மாதம் 28-ம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கின்றது. இச் சுற்றுப் போட்டியில் பத்துக்கதிகமான கழகங்கள் பங்கு கொள்கின்றன.

இச் சுற்றுப்போட்டியை வெற்றிகரமாக நடாத்த மாந்தைக் காரியாதிகாரி திரு மு. சுப்பிரமணியமும் மாந்தைக் காரியாதிகாரி பிரிவு விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு எம், டி தம்பிராசாவும் முயற்சி செய்து வருகின்றார்கள்.


ஊர்காவற்றுறைப் பட்டினசபை

### கேள்வி விளம்பரம்

1970-ம்ஆண்டு சித்திரை மாதம் 17-ந் திகதி மாலை 2மணிவரை பட்டினசபைத் தலைவரால் கீழ்க்குறிக்கப்படும் வேலைக்குச் சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அர்ச். யேம்ஸ் கோவில்வீதி திருத்தியமைத்தல் மற்றும் விபரங்கள் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். இம்மானுவல்,
தலைவர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபைக்
காரியாலயம்,
ஊர்காவற்றுறை,
5-4-70. 2211


## மதுத்தடுப்பு வாரம்

முசலி, செவ்வாய்

இலங்கை தேசிய கிறிஸ்தவ மாதர் மதுத் தடுப்பு இயக்கத்தின்மூலமாயும் இலங்கை அரசாங்கம் உள்நாட்டு அமைச்சின் மூலமாயும் ஒரு மதுத்தடுப்பு வாரத்தை இவ்வருட ஆடி மாதம் 3-ம் திகதி தொடக்கம் 9-ம் திகதிவரை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்துவருகின்றது.



உதைபந்தாட்டம்

# இலங்கை இளைஞர் கோஷ்டி இரு ஆட்டங்களிலும் வெற்றி

## நெல்சன் பெரேராவின் அபாரமான ஆட்டம்

யாழ்ப்பாணம், புதன்

மணிலாவில் நடைபெறவிருக்கும் ஆசிய இளைஞர் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக இம்மாதம் மணிலா செல்லவிருக்கும், இலங்கை இளைஞர் தெரிவுக் கோஷ்டி கடந்த இரு தினங்களாக யாழ்ப்பாணத்தில் கலந்து கொண்ட இரு உதைபந்தாட்டப் போட்டிகளிலும் அமோக வெற்றியை பெற்றுள்ளது.

### பத்து கோல்களால் வெற்றி

இலங்கை இளைஞர் உதைபந்தாட்ட தெரிவுக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாண இளைஞர் தெரிவுக்கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற முதல்நாள் போட்டியில் இலங்கை இளைஞர் கோஷ்டி வெற்றி பெற்றது

இப்போட்டி ஆரம்பமாகி இடைவேளைவரை இரு கோஷ்டியினரும் கோல்கள் எதுவும் போடாமல் மிகவும் வேகமாக விளையாடினர். இடைவேளைக்கு முன்னர் யாழ். இளைஞர் கோஷ்டியினர் இரு கோல்களைப் போட்டு மிக இலகுவான சந்தர்ப்பங்களை நழுவவிட்டு விட்டனர் இடைவேளையின் பின் இலங்கை இளைஞர் கோஷ்டியில், நெல்சன் பெரேரா, கிளைமன்டிஸ் சில்வா, டெமின் பெர்ஞண்டோ ஆகிய மூவரும் சேர்ந்து விளையாட முற்பட்டதும், கோல்களின் எண்ணிக்கை ஒன்றன் பின் ஒன்ருக மிக வேகமாகக் கூடிக் கொண்டிருந்தது. இவர்களின் மின்னல் வேகமான தாக்குதல்களை யாழ் இளைஞர் கோஷ்டியின் பின்னணி வீரர்களால் தடுக்க முடியவில்லை. ஆட்டமுடிவில் இலங்கை இளைஞர் கோஷ்டி 10-0 கோல்களால் வெற்றி பெற்றனர். யாழ். இளைஞர் கோஷ்டியின் வீரர்களான மோகன்ராம், ரேமன் ஆகியோரின் விளையாட்டு சிறப்பாக இருந்தது.

இப்போட்டிக்கு திரு. சற். சிங்கராயர்மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### 9 கோல்களால் வெற்றி

யாழ்ப்பாண தலைவர் தெரிவுக் கோஷ்டிக்கும், இலங்கை இளைஞர் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியிலும் இலங்கை இளைஞர் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகி எட்டு நிமிடங்களின் பின், யாழ். தலைவர் கோஷ்டியின் வலது கரை முன்னணி வீரர் நவாப்ராஜா முதலாவது கோலைப்போட்டார். இதையடுத்து இலங்கை இளைஞர் கோஷ்டியின் காப்டன் நெல்சன் பெரேரா அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டார். இதன்பின் யாழ். தலைவர் தெரிவுக்கோஷ்டியின் பின்னணி வீரர் பெர்ஞண்டோ தமது கோஷ்டியின் சார்பில் இரண்டாவது கோலைப் போட்டார். இடைவேளையின் போது இலங்கை இளைஞர்கோஷ்டி 5—2 கோல்களைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் இலங்கை இளைஞர்கோஷ்டியினர் மேலும் நாலு கோல்களைப் போட்டனர். இக் கோஷ்டியின் வீரர்கள் அனைவரினதும் விளையாட்டு இப்போட்டியில் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது.

யாழ். இளைஞர் கோஷ்டிக்கும் யாழ். தலைவர்தெரிவுக் கோஷ்டிக்கும் கோல் காப்பு வீரராகக் கடமையாற்றிய வீரர் ஜெயராசா எதிர்க் கோஷ்டியினரின்பல மின்னல் தாக்குதல்களை மிக சாதுரியமாக முறியடித்து, ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களையும் இலங்கை இளைஞர்கோஷ்டியின் பயிற்சியாளர் திரு. கிங்கினது பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டார்.

இப்போட்டியின் முடிவில் இலங்கை இளைஞர்கோஷ்டி 9—2 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றஇப்போட்டிக்கு திரு பேரின்பநாயகம் மத்தியஸ்தம் வகித்தார். (தே. நி)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 8—4—70

(செய்[illegible] 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

## 'ஈழநாடு' பாலைதீவு நிவாரணநிதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'ஈழநாடு' பாலைதீவு நிவாரண நிதிக்கு நவாலியூர் ஸ்ரீகலைவாணி நாடக மன்றம் மூலம் நிதிஉதவியவர்கள் வருமாறு:

| | |
|---|---|
| எம் புவனேந்திரன் | 25-00 |
| என் சிவநேசன் | 10-00 |
| சோ இளமுருகனுர் | 5 00 |
| கே குழந்தைவேலு | 5-00 |
| ஜி தேவதாசன் | 5-00 |
| கே மகாலிங்கம் | 5-00 |
| ஜி சண்முகநாதன் | 5-00 |
| கே சுப்பிரமணியம் | 5-00 |
| பி முருகேசு | 5-00 |
| ஏ எதிர்வீரசிங்கம் | 5-00 |
| பி நடராசா | 5-00 |
| கே அரியரட்ணம் | 5-00 |
| ஏ தெய்வேந்திரம் | 5-00 |
| எஸ் சிவலிங்கம் | 3-00 |
| கே இரத்தினம் | 3-00 |
| ரி சற்குணம் | [illegible]00 |
| ஐ நாகர் | 3-00 |
| வி செல்லத்துரை | 2-00 |
| மு பொன்னு | 2-00 |
| என் இராசரத்தினம் | 2-00 |
| [illegible]செல்லையா | 2-00 |
| கே தில்லையம்பலம் | 2-00 |
| ஐ சிவக்கொழுந்து | [illegible]00 |
| என் [illegible] | 2-00 |

## உற்சவம்

புங்குடுதீவு, செவ்வாய்

புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் ஆலய மகோற்சவம் இம் மாதம 12ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. இவ் வருடம் புதிதாகச் செய்யப்பட்ட வெள்ளிக் கொடிமரத்தில் கொடியேற்றுவிழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. 21ம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்ததினம் தெப்பத் திருவிழாவும் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி - பத்மினி - சாவித்திரி
நடித்த
சரஸ்வதி சபதம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30


## வடஇலங்கை த. ஆ. சங்க பேச்சு, இசைப்போட்டிகள்

உரும்பராய். செவ்.

''மாணவர்கள் ஏட்டுக் கல்வியுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது: சிறந்த பேச்சாளர்களாவும் திகழவேண்டும். நல்ல மேடைப் பேச்சாளர்களாக வருவதற்கு சிறந்த பயிற்சி வேண்டும். பேச்சாளன் தான் பேசப் போகும் விஷயத்தை நன்கு சிந்தித்து கேட்பவர்களுக்கு ஈடுபாட்டை உண்டாக்கத் தக்கவகையில் பேசுதல் வேண்டும்'' என வடஇலங்கைத் தமிழாசிரியர்சங்கத்தினுல் நடாத்தப்பட்ட பேச்சு, இசைத்திறனுய்வுப் போட்டிப் பரிசளிப்புவிழாவில் மத்தியஸ்தர்கள் சார்பில் பேசிய வித்துவான் க. சொக்கலிங்கம் குறிப்பிட்டார்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் போட்டிகள நடைபெற்றன.

திரு. அ. பஞ்சாட்சரத்தின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பமான இவ்விழாவுக்கு திரு. த. இராசேந்திரம் தலைமை தாங்கினுர். பொதுக்காரியதரிசி திரு. ஆ. க மாணிக்கம் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

### பேச்சுப்போட்டி

கீழ்ப்பிரிவு-ஆண்கள்: சி. சிவகாந்தன் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை. ஐ தேவானந்தன் வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை, ந தயாபரன் கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை

கீழ்ப்பிரிவு-பெண்கள்: ஜெரஞ்சிதலட்சுமி அல்வாய் வடக்கு றோ க. பாடசாலை, ச மேரிகிளாட்டா கன்னியர் மடம் மகளிர் வித்தியாலயம், கு சித்திராகௌரி கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்

மத்தியபிரிவு-ஆண்கள்: கு ஜோதிபாலா சென் சாள்ஸ் றோ. க. பாடசாலை, வ விக்னேஸ்வரன் நயினுதீவு மகா வித்தியாலயம், அ பிரான்சிஸ் நாவாந்துறை றோ. க. பாடசாலை.

மத்திய பிரிவு - பெண்கள்: ச வசந்தநாயகி மல்லாகம் அ. மி. பாடசாலை, சி சிவகுமாரி சரசாலை ஸ்ரீகணேச வித்தியாசாலை, க ஜெயஸ்ரீ நயினுதீவு மகா வித்தியாலயம்

சங்கீதபூஷணம் திரு. பொ சந்திரசேகரம் பேசுகையில், 'மாணவர்களின் மனதில் இசைக்கு இடமேற்பட்டது மகிழ்ச்சிக்குரியது' என்ருர்,

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கக்காரியதரிசி திரு. க. இ. குமாரசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்

(4ம் பக்கம் பார்க்க)


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் (3 வேடங்களில்) விஜயநிர்மலா - பாலையா நடித்த
சிரித்த முகம்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு நடித்த
ஹரிச்சந்திரா

வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல் (கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# எளில் மிகு
# கோயா
## வாசனைப்பவுடர் பாவித்து ஒய்யார மாதராய்த் திகழுங்கள்.

கோயா — உலகின் மதிமிகு செழுமைப் பவுடர் - உங்களை அரவணைகையில் வாசனையூட்டவல்லது. தன் இழை - நயத்தால் உங்களைக் காத்தணைத்து நாள் முழுவதும் சுகந்த மலர்ச்சியுடன் விளங்க வைக்கும். மற்றெல்லாப் பவுடர்களையும் விட அதி மிருதுவானது, மென்மைப்பட்டினைப் போன்றது. பரிவசமூட்டும நறுமணம் கொண்ட கோயா வாசனை நிறைந்தது. அழகு உருவில் உங்களை ஆழ்த்தவல்லது. செல்லுமிடமெல்லாம் இன்னயம் பொலிந்து, உன்னத ஆடவரை தன்னயம் இழக்கச் செய்வீர்கள்

பரிஸ், லண்டன், நியூயார்க் நகரங்களின் கோயா, உலகின் எளில் மிகு நவநாகரீக நளின் நங்கையரால் விரும்பிப் பாவிக்கப் படுகிறது

என்டைஸ், கார்டீனியா, வைல்(ட)சில்க், லவ் அவ்பையர், பிளக்ரேஸ், நம்:-5, ஆகிய வற்றிலிருந்து உங்கள் அபிமான பவுடரைத் தேர்ந்தெடுங்கள்.




இவற்றுக்கணைய கோயா சோப்களும் உள.

**கோயா** பரிஸ், லண்டன், நியூயார்க் நகரங்களின் நவநாகரீக நங்கையரால் பாவிக்கப்படும் செழுமைப் பவுடர் உங்களையும் எளில் மிகு நளின் நங்கையராக்கட்டும்.

## கூட்டுத்தாபனம்
### புதன் 8—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச் சுருக்கம்.

334 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலி பரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 விளையாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

| | |
|---|---|
| ஐ நாகர் | 3-00 |
| வி செல்லத்துரை | 2-00 |
| மூ பொன்னு | 2-00 |
| என் இராசரத்தினம் | 2-00 |
| எம் செல்லையா | 2-00 |
| கே தில்லையம்பலம் | 2-00 |
| ஐ சிவக்கொழுந்து | 2-00 |
| எஸ் கந்தையா | 2-00 |
| என் நடராசா | 2-00 |
| கே சுப்பிரமணியம் | 2-00 |
| ரி குகதாசன் | 2-00 |
| கே அப்புக்குட்டி | 2-00 |
| ஆர் ஏ இராசையா | 2-00 |
| எஸ் சண்முகசுந்தரம் | 2-00 |
| எஸ் சின்னத்துரை | 2-00 |
| எம் கந்தையா | 2-00 |
| என் சின்னையா | 2-00 |
| கே தம்பிராசா | 2-00 |
| கே மாணிக்கம் | 2 00 |
| கே நடராசா | 2-00 |
| மல்லிகாதேவிசின்னையா | 2-00 |
| வி கணபதிப்பிள்ளை | 1-00 |
| ரி அன்ரன் | 1-00 |
| எஸ் தம்பு | 1-00 |
| எஸ் சந்திரன் | 1-00 |
| கே சிவக்கொழுந்து | 1-00 |
| கே சிவலிங்கம் | 1-00 |
| வி சதாசிவம் | 1-00 |
| கே இரத்தினம் | 1-00 |
| எஸ் சிவலிங்கம் | 1-00 |
| என் அப்புக்குட்டி | 1-00 |
| ஆர் ஏ ஜேம்ஸன் | 1 00 |
| ஆர் ஜி டேவிட் | 1-00 |
| கே தாமோதரம்பிள்ளை | 1-00 |
| என் கணேசன் | 1-00 |
| ரி உருத்திரன் | 1-00 |
| கே தம்பிராசா | 1-00 |
| கே முத்தையா | 1-00 |
| எம் கந்தசாமி | 1-00 |
| ஓர் அன்பர் | 1-00 |
| மொத்தம் | 161,00 |

## ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிரிப்போயா, போயா 2-30
ஜெமினி-சாவித்திரி
நடித்த
**கொஞ்சும் சலங்கை**

## REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m
Poya. Prepoya 4 shows
Laurence Harvey,
Julie Christie
in
**D A R L I N G**
(adults only)

## MANOHARA
### JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Christopher Lee
in
**R A S P U T I N**
**THE MAD MONK.**
(Scope-color- adults only)

மன்னரையும், மங்கையரையும் தன் இச்சைப் படி கிப்னூற்றிச சக்தியால் இணங்க வைத்து வெற்றிநடை போட்ட ரஷ்ய மதவாதி ரஸ்புடீன்

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்




# சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்
# தில்லானா மோகனாம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி
நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
# சுபதினம்



# யாழ். வின்ஸர் வெண்திரையில்
புத்தாண்டுப் பரிசாக இன்றுமுதல் குதூகல ஆரம்பம்
தினசரி 4 காட்சிகள்
★ நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
★ பாரதி ★ மனோகர்
★ வெண்ணிற ஆடை நிர்மலா
★ ஓ. ஏ. கே. தேவர் ★ ஹரி கிருஷ்ணன்
முதலியோர் நடித்த
ஈ. வி. ஆர். பிக்சர்ஸ் அளிக்கும்
# தங்கச் சுரங்கம்
(முழு நீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌத்தமாலாவிலுள்ள

# மேற்கு ஜேர்மன் ராஜதந்திரிகள் திருப்பி அழைக்கப்படுகின்றனர்

## லத்தீன் அமெரிக்காவுக்கு வில்லிபிரான்ட் விஜயம் ரத்து

## தூதுவர் படுகொலை பற்றி உலகம் முழுவதும் கண்டனம்

கௌத்தமாலா, ஏப்ரல் 7

**கடத்தப்பட்ட மேற்கு ஜேர்மன் தூதுவர் கார்ல் வொன் ஸ்ப்ரெட்டி கொலைசெய்யப்பட்டிருப்பது குறித்து உலகம் முழுவதும் கண்டனம் தெரிவித்தது.**

இடதுசாரி தீவிரவாதிகளினால் இந்த ராஜதந்திரி அண்மையில் கடத்திச்செல்லப்பட்டார், அவரை விடுவிப்பதாயின் 7 லட்சம் டாலர் பணம் தரவேண்டும் என்றும், சிறைப்பிடித்து வைக்கப்பட்டுள்ள தங்களின் சகாக்கள் 25 பேரையும் விடுதலைசெய்யவேண்டுமென்றும் தீவிரவாதிகள் நிபந்தனை விதித்திருந்தார்கள். ஆனல் கௌத்தமாலா அரசாங்கம் இந்த நிபந்தனைகளுக்கு இணங்கமறுத்துவிட்டது. இதனல் மேற்கு ஜேர்மன் தூதுவரை அவர்கள் கொலைசெய்துவிட்டனர்.

### உறவுகள் முறிகின்றன

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கௌத்தமாலாவில் இருக்கும் மேற்கு ஜேர்மன் ராஜீய அதிகாரிகள் அனைவ திருப்பி அழைக்கப்படுகின்றனர் தூதுவர் கொலை செய்யப்பட்டது குறித்து மேற்கு ஜெர்மன் அரசு பெரிதும் கவலைகொண்டிருக்கிறது. மேற்கு ஜெர்மன் பிரதமர் வில்லி பிரான்ட் ...க்கிருர்.

கௌத்தமாலாவிலுள்ள மேற்கு ஜெர்மன் ராஜீய அதிகாரிகள் திருப்பியழைக்கப்பட்டபோதிலும் பொன்னிலுள்ள கௌத்தமாலா அதிகாரிகள் திருப்பியழைக்கப்படமாட்டார்களென்று தெரிகின்றது.

### யுதாண்ட் கவலை

மேற்கு ஜெர்மன் தூதுவர் படுகொலைசெய்யப்பட்டது குறித்து ஐ. நா. பொதுச்செயலாளர் பெரிதும் கவலை தெரிவித்திருக்கிருர்.

போப்பாண்டவர் அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவிக்கின்ருர்.

மேற்கு ஜெர்மன் தூதுவர் கொல்லப்பட்டது குறித்து கௌத்தமாலா அரசாங்கமும் கவலை தெரிவித்திருக்கிறது. ஆனல் தீவிரவாதிகளின் நெருக்குதல்களுக்கு விட்டுக்கொடுக்காத தனது நிலையை அது இன்னும் சரியென்று சாதிக்கின்றது.

### தூதுவர்

ஸ்ப்ரெட்டியின் கொலைசெய்யப்பட்ட சடலம் நெற்றிப்பொட்டில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் கண்டுபிடிக்கப்பட்டது கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை இவர் இடதுசாரி புரட்சிவாதிகளின் ஆயுதம் தாங்கிய குழுவினரால் கடத்திச்செல்லப்பட்டார். தலைநகரின் மேற்குப் பகுதியில் ஒரு வீட்டில் தூதுவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது. சடலத்தின் காலடியில் அவரது கறுப்புக் மூக்குக்கண்ணடி கிடந்தது. அவரது கோட்டும் பணப்பையும் இதர சாமான்களும் பக்கத்தில் கிடந்தன. பழமையான கூரையில்லாதவீடொன்றின் தரையில் நீலநிற 'சூட்' உடுத்திய நிலையில் அவர் கிடந்தார்.

இதேபோல் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமெரிக்கத் தூதுவர் ஜோன் கார்டன் மெயின் என்பவர் தீவிரவாதகளால் கொலைசெய்யப்பட்டார்.

அதே ஆண்டில் பயங்கரவாதிகளால் கௌத்தமாலா...

## அப்பலோ-13 வீரர்களுக்கு சின்னமுத்து ஏற்படுமா?

### விஞ்ஞானிகள் கவலை

கென்னடிமுனை, ஏப், 7

அப்பலோ - 13 வீரர்களுக்கு சின்னமுத்து நோய்க் கண்டவர்களுடன்தொடர்பு ஏற்பட்டுவிட்டதாகவும் இதனல் அடுத்த ஞாயிற்றுக்கிழமை இவர்கள் அப்பலோ-13 கலத்தில் சந்திரனுக்குப் புறப்படுவார்கள் என்பதில் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. சின்னமுத்து நோயினல் இவர்கள் பாதிக்கம்படா விட்டாலும் இந்நோயின் தொடர்பு ஏற்பட்டிருப்பது விஞ்ஞானிகளுக்கு கவலையளித்துள்ளது. வீரர்கள் மூவரும் நல்ல திடகாத்திரத்துடன் இருப்பதாகவும் அதனல் சின்னமுத்து இவர்களுக்கு ஏற்படுவது சாத்தியமில்லையென்றும் கருதப்படுகின்றது. அப்பலோ-13 கலத்தில் ஏற்கனவே ஏற்பட்ட ஒரு கோளாறு திருத்தப்பட்டு விட்டது.

## கோளாறு திருத்தப்பட்டது

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சந்திரனை நோக்கிச் செலுத்தப்படவிருக்கும் அப்பலோ-13 கலத்தின் முக்கிய இறுதிப்பிரிசோதனை நேற்று காலை ஆரம்பமாயிற்று.

இந்தப்பரிசோதனை ஆரம்பமாகுமோ வென்று முதலில் சந்தேகம் ஏற்பட்டிருந்தது கலத்தின் எரிபொருள் அழுத்தப்பகுதியில் கோளாறு ஏற்பட்டிருந்ததே இதற்கு காரணம். இந்தக் கோளாறு திருத்தப்படாவிடில் அப்பலோ 13 செலுத்தப்படுவது ஒரு மாதகாலத்துக்கு பின்போடப்படலாம் என்று கருதப்பட்டது. ஆனல் இந்தக் கோளாறை திருத்தமுடியும் என்றும் அதனல் கலம் குறித்த நாளில் செலுத்தம்படலாம் என்றும் இப்போது விஞ்ஞானிகள் நம்புகிருர்கள்.

அடுத்த 1... சந்திரனைநோக்கி செலுத்தப்படவிருக்கும் அப்பலோ-13ல் ...யில் போய் இறங்கவிருக்கிருர்கள்.

சந்திரத் தரையை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து, சந்திரனின் ஆரம்பகால எல்லையை அறியக்கூடியதாக சந்திரத் தரையிலுள்ள 40 அடி உயரமான எரிமலையின் வாயிலுள்ள கற்களை அப்பாலோ 13-ன் வீரர்கள் எடுத்துவருவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்பலோ 13 விண்வெளிக் கப்பலின் நுணுக்கமான பரிசிலனைக்குப் பின்னர் விண்வெளிக் கப்பல் 12-ம் திகதி பிரயாணமாகின்றது.

கடந்த ஆண்டு யூன் மாதம்முதன் முதல் சந்திரத் தரையில் மனிதன் கால் வைப்பதற்குக் காரணமான அப்பாலோ 11, அதனை அடுத்துகடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ... அப்பலோ 12 ... விண் வெளி யாத்திரைகளைவிட அப்பலோ 13 யாத்திரை சற்றுப் பயங்...

வல்வை

### முத்துமாரியம்மன் உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினைந்து தினங்கள் திருவிழா நடைபெறும். 17-ம் திகதி பூங்காவனத் திருவிழாவும், 20 ம் திகதி ரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

வவனியா

### முன்னள் எம்.பிக்கு வரவேற்பு

முல்லைத்தீவு, செவ்.

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவரும் முன்னைநாள் வவனியா எம் பி யுமான திரு தா சிவசிதம்பரம் முல்லைத்தீவில் அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கிளைக் காரியாலயத்தை கடந்த 3-ம் திகதி திறந்துவைத்தார். திரு. சிவசிதம்பரத்திக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இவ்வைபவத்தையொட்டி வற்ருப்பளை அம்மன் கோவில் சந்தியிலிருந்து ஆரம்பமான சைக்கிள் ஊர்வலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட வாலிபர்கள் கட்சிக் கொடியுடன் முன் செல்ல ஜீப் வண்டியில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகரும் முன்னைநாள்எம் .பி யுமான திரு. தா. சிவசிதம்பரம் ...

## கோவிலில் களவு

மாவிட்டபுரம், செவ்.

கோவில் முன் கதவை உடைத்து மறு கதவை எரித்து உள் ஆலயத்தில்இருந்து பல பொருட்களை இனந் தெரியாத கோஷ்டி ஒன்று களவாடியுள்ளதாம்.

சுன்னுகம் ஐயனர்ஆலயத்தில் நடந்த களவு குறித்து கோவில் முகாமையாளர்சுன்னுகம் பொலிசில் செய்த புகாரில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆலய முன் கதவை உடைத்து 2-ம்கதவை நெருப்பு வைத்து எரித்து உட்பிரவேசித்த இனம் தெரியாத நபர்கள் விக்கிரகங்களை நகர்த்தியுள்ளனர். பல பொருட்களையும் களவாடியுள்ளார்கள் என அவர் தெரிவித்துள்ளார். இதுசம்பந்தமாக சுன்னுகம் பொலிசார் தீவிர விசாரணை நடத்துவதோடு கை அடையாளங்களை பதிவுசெய்தனர் இதுவரை எவரும் கைதாகவில்லை.

காதல்நிறைவேற

## பொலிஸ் ஆதரவை நாடுகிறது இளம் ஜோடி

மாவிட்டபுரம், செவ்.

தாய், தந்தை விரும்பாத காதலை நிறைவேற்றிக் கொள்ள காதல் ஜோடியொன்று சுன்னுகம் பொலிசாரின்ஆதரவைநாடியது.

சண்டிலிப்பாயைச்சேர்ந்த 23 வயது வாலிபனுககும் சங்குவேலியைச்சேர்ந்த 22 வயது பெண்ணுக்கும் பல வருடமாக இருந்து வந்த காதலை பூர்த்திசெய்து விவாகம் செய்துவைக்க தாய் தந்தையர் சம்மதம் அளிக்காததால் இருவரும் நேற்று சுன்னுகம் பொலிசுக்கு வந்து தாம் சட்டப்படி பதிவுத்திருமணம் செய்யப் போவதாகவும் அதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் எனவும் முறைப்பாடு செய்துள்ளனர்.

## மருதடிப் பிள்ளையார் தேர்; விசேஷ போக்குவரத்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் பதினன்காம் திகதி நடைபெறவிருக்கும் மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழாவுக்கு பெரும்தொகையான பக்தர்கள் கலந்து கொள்வதால் அவர்களுக்கு வசதியாக விசேஷ போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடந்த மகாநாடொன்றின் பின்னர் இந்த 14-ம் திகதிய போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர், பண்டைத் தெருப்பு ஆகிய இடங்களுக்கு மானிப்பாய் ஊடாகச் செல்லும் பஸ்களின் சேவையில் மாற்றமிருக்காது. நண்பகல் 1 மணியளவில் தேர் பிரதான வீதியால் திரும்பும்போது சில நிமிட நேரங்களுக்கு பஸ் போக்குவரத்தை நிறுத்த வேண்டி ஏற்படும்.

சங்கானை உடுவில் ஊடாகச் செல்லும் எல்லா வாகனங்களும் கிறீன் மெம்மோறியல் ஆஸ்பத்திரிக்கு பின்னுலுள்ள வீதியால் செல்ல அனுமதிக்கப்படும். காலை 10 மணியிலிருந்து 4 மணி ... சேவை மட்டும் நடைபெறும்.

காரைநகர், மாதகல், கீரிமலை ஆகிய இடங்களிலிருந்து மானிப்பாய் ஊடாக யாழ்ப்பாணம் வரும் பஸ்கள் எல்லாம் மானிப்பாய் ஆஸ்பத்திரிச் சந்தியிலிருந்து வலப்பக்கமாக வழமைபோல் திரும்பாமல் நேரே மருதனமடம் சந்திக்குச் சென்று அங்கிருந்து தாவடி, சுதுமலை, மானிப்பாய்ஊடாகச் (சுதுமலைச்சந்தி) சென்று யாழ்ப்பாணம் அடையும். காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் இந்த ஏற்பாட்டின்படி சேவை நடக்கும்.

பருத்தித்துறை - நவாலி பஸ்கள் மானிப்பாய் மெம்மோறியல் ஆஸ்பத்திரிச் சந்திவரை சென்று தாவடி, சுதுமலை ஊடாக நவாலி செல்லும். காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் இப்படியாக இச்சேவை நடைபெறும். சாவகச்சேரி-மானிப்பாய் பஸ் மானிப்பாய் மெம்மோறியல் ஆஸ்பத்திரி சந்திவரை சென்று திரும்பும்.

யாழ்ப்பாணம் செல்லும் எந்த வாகனமும் கோயிலுக்கு முன்னுலுள்ள ரேட்டினூடாக காலை 10 மணிக்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருப்பி அழைக்கப்படுகின்றனர் தூதுவர் கொலை செய்யப்பட்டது குறித்து மேற்கு ஜெர்மன் அரசு பெரிதும் கவலைகொண்டிருக்கிறது. மேற்கு ஜெர்மன் பிரதமர் வில்லி பிராண்ட் லத்தின் அமெரிக்க நாடுகளில் மேற்கொள்ளவிருந்த விஜயத்தை ரத்துச்செய்திருக்கிறது. ஆனால் தீவிரவாதிகளின் நெருக்குதல்களுக்கு விட்டுக்கொடுக்காத தனது நிலையை அது இன்னும் சரியென்று சாதிக்கின்றது.

**தூதுவர் சடலம்**

62 வயதான மேற்கு ஜெர்மன் தூதுவர் கார்ல் வொன்

ஆண்டு ஆகஸ்ட் மாதம் அமெரிக்கத் தூதுவர் ஜோன் கார்டன் மெயின் என்பவர் தீவிரவாதிகளால் கொலைசெய்யப்பட்டார்.

அதே ஆண்டில் பயங்கரவாதிகளால் கௌதமாலா நகரில் வைத்து அமெரிக்க ராணுவத் தூதுக்குழு ஒன்று படுகொலை செய்யப்பட்டது

த்த நாளில் செலுத்தம்படலாம் என்றும் இப்போது விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

அடுத்த 12-ம் திகதி சந்திரனைநோக்கி செலுத்தப்படவிருச்கும்அப்பலோ-13ல் செல்லவிருக்கும்மூன்று வீரர்களில் இருவர் சந்திரனின் மிக சிரமமான ஒரு பகுதி

வைப்பதற்குக் காரணமான அப்பாலோ 11, அதனை அடுத்துகடந்த ஆண்டு டிசம்பர் மநநம் சென்ற அப்பலோ 12 ஆகிய விண்வெளி யாத்திரைகளைவிட அப்பலோ 13 யாத்திரை சற்றுப் பயங்கர முனடயதாகவே அமையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

வலத்தில் ...... பட்ட வாலிபர்கள் கட்சிக் கொடியுடன் முன் செல்ல ஜீப் வண்டியில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகரும் முன்னைநாள்எம்.பி யுமான திரு. தா. சிவசிதம்பரம் பின் சென்று முல்லைத்தீவு நுழைவாசலையடைந்த போது அவரை மாலை போடடு வரவேற்றனர்,

சங்கானை உடுவில் ஊடாகச் செல்லும் எல்லா வாகனங்களும் கிறீன் மெம்மோறியல் ஆஸ்பத்திரிக்கு பின்னுலுள்ள வீதியால் செல்ல அனுமதிக்கப்படும். காலை 10 மணியிலிருந்து 4 மணிவரை இந்த விசேஷ போக்குவரத்து நடக்கும். இந்த வீதியால் 'ஒருவழிப்பாதை'

பத்திரி சந்திவரை சென்று திரும்பும்.

யாழ்ப்பாணம் செல்லும் எந்த வாகனமும் கோயிலுக்கு முன்னுலுள்ள ரோட்டினூடாக காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் செல்ல அனுமதிக்கப் படமாட்டா'

# இஸ்ரேல் பிரதேசத்தில் அரபுக்கள் ஊடுருவித் தாக்கினர்கள்

கெய்ரோ, ஏப்ரல் 7

இஸ்ரேலியரின் ஆக்கிரமிப்பிலுள்ள பிரதேசமொன்றில் ஐக்கிய அரபுக் குடியரசு கொமாண்டோ படையினர் ஊடுருவிப் பாய்ந்து கடுமையான தாக்குதலை நடத்திவிட்டுத் திரும்பிவந்திருக்கிறார்கள்.

எகிப்தியர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இந்தத் தாக்குதல் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றதாக அறிவித்துள்ளனர். சூயஸ் கால்வாயின் கிழக்குப்பகுதியில் சுமார் 60 கிலோமீட்டர் தொலைவில் அரபுக் கொமாண்டோக்கள் இஸ்ரேல் பிரதேசத்தில் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்தினார்களாம். இந்தத் தாக்குதலினால் இஸ்ரேலியருக்கு கடுமையான நஷ்டம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகின்றது. ஆனால் இஸ்ரேலியர் இதை மறுத்திருக்கிறார்கள். இஸ்ரேலியர் ஒருவர் மட்டும் காயமடைந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

லெபனான் எல்லைக் கிராமமொன்றின்மீது இஸ்ரேலியர் கடுமையான தாக்குதல்களை நடத்தியிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

**தயான் எச்சரிக்கை**

எகிப்திய எல்லைகளின் ஓரங்களில் ஏவுகணைத் தளங்களை அமைக்க சோவியத் யூனியன் உதவியளிக்கிறதென்று தாம் நம்புவதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. தயான் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இம்மாதிரி நடவடிக்கைகளில் சோவியத் யூனியன் ஈடுபடுவதனால் இஸ்ரேலுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் நேரடித் தகராறு ஏற்படலாம் என்று அவர் கருதுகிறார். எகிப்தியருக்கு உதவி செய்யும் சோவியத் அதிகாரிகள் கொல்லப்பட்டால் இந்த நிலைமை ஏற்படக்கூடும் என்று அவர் கருதுகிறார். சோவியத் யூனியனுக்கு விடுக்கப்பட்ட மறைமுகமான எச்சரிக்கையிதுவென்று கருதப்படுகின்றது.

**இஸ்ரேல் ஆட்சிமன்றம்**

யூதர்களின் உலகத் தலைவர் மத்திய கிழக்கு நிலைமைகள் குறித்து எகிப்திய அதிபர் அப்துல் நாஸருடன் ஆலோசனைகள் நடத்துவதற்கு இஸ்ரேல் அரசாங்கம் அனுமதி மறுத்துவிட்டது குறித்து இஸ்ரேலிய ஆட்சிமன்றத்தில் இரண்டு கண்டனப் பிரேரணைகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

இம்மாதிரி சந்திப்பு தனிப்பட்ட முறையில் இடம்பெறுவதற்கு அரசு ஆட்சேபிக்கவில்லையென்றுஜெனரல் தயான் கூறியிருக்கிறார்.

## மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் காலமானர்

சென்னை, ஏப். 7

கர்நாடக இசை மேதை மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் தமது 74வது வயதில் காலமானார்.

1955ல் சங்கீத நாடக அகடமி பரிசுபெற்ற இவர், அதற்கு முந்திய ஆண்டில் சென்னை மியூசிக் அகடமி ஆண்டுக் கூட்டத்தில் தலைமைதாங்கியபோது 'சங்கீத கலாநிதி' என்ற பட்டத்தைப் பெற்றார். 'சங்கீத பூபதி' என்ற பட்டமும் பெற்றவர் இவர்.

யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரியில் இசைப் பயிற்சியளித்த திரு. சந்தானம் அவர்களின் தந்தையுமாவார்.

## நுணசை முருகமூர்த்தி உற்சவம்

மாதகல், செவ்வாய்

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 10-ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது. தினமும் பிற்பகல் 1 மணி தொடக்கம் பல பெரியோர்களால் கந்தபுராணச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெறும்.

தமிழ்நாட்டில்

## இந்திரா காங்கிரஸ் மாநாடு

மன்னார்குடி. ஏப். 7

வருகிற 18, 19ம் திகதிகளில் தஞ்சைமாவட்ட மன்னார்குடியில் இந்திரா காங்கிரஸ் மகாநாடு நடைபெற இருக்கிறது.

இம்மகாநாட்டிற்கான பந்தல் 21 ஏக்கர் நிலத்தில் சுமார் 1லட்சம் ரூபா செலவில் போடப்படவிருக்கிறது இப்பிரமாண்டமான பந்தலில் 3 லட்சம்பேர் உட்கார வசதி செய்யப்படவுள்ளது. இப்பந்தலில்1,600 குழாய் விளக்குகளும் 1,000 வர்ண விளக்குகளும் இணைக்கப்படும். இம்மகாநாட்டுக்கான மேடை 50அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்டதாக சுமார் ரூ 10 ஆயிரம் செலவில் அமைக்கப்படும் பலபக்கங்களிலும் இருந்து பார்க்கக் கூடிதாக பந்தலின் உள்ளே 20 இடங்களில் டெலிவிஷன் கருவிகள் பொருத்தப்படும்.

மகாநாட்டு பந்தலின் முகப்பில் 3 நுழைவாயில் அமைக்கப்படும். 1 தஞ்சை கோவில், 2,வேளாங்கண்ணி மாதா கோவில், 3 பள்ளி வாசல் ஆகிய தோற்றங்களாகக் கட்டப்படும் திருமதி காந்தி, மந்திரிகள் ஆகியோர் தங்குவதற்கான குளிர் சாதன அறைகள் தயார் ஆகின்றன.

## கொக்குப்படையானுக்கு பஸ் சேவை

முசலி, செவ்வாய்

முசலி தெற்கு கிராமச் சபைத்தலைவர் திரு. எம். சி. எம். கபூர் அவர்களின் வேண்டுகோளுக்குப் பின்பு சிலாவத்துறையிலிருந்து கொக்குப்படையானுக்கு பஸ்சேவைஅண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## எம். பி.க்கள் தாக்கப்பட்டது பற்றி நீதிவிசாரணை
### இந்திரா வாக்குறுதி

புதுடில்லி, ஏப். 7

சம்யுக்தசோஷலிஸ்ட்கட்சி நேற்று நடத்திய ஆர்ப்பாட்டங்களின்போது ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சிலர் தாக்கப்பட்டது குறித்து நீதிவிசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

இந்தஆர்ப்பாட்டங்களின் போது கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி நடத்திய ஆர்ப்பாட்டங்களின் போது எம்.பிக்கள் சிலரும் பொலிசாரால் தாக்கப்பட்டது குறித்து லோகசபையில் சுமார் 5 மணி நேரம் விவாதம்நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராம்சுபாக் சிங் தாக்கல் செய்த ஒத்திவைப்பு பிரேரணையொன்றின்மீது இந்த விவாதம் நடைபெற்றது. பிரதமமந்திரி குறுக்கிட்டு பேசுகையில் எம்.பிக்கள் சிலர் தாக்கப்பட்டது குறித்து தாம் கவலையடைவதாகவும் இதுபற்றி நீதி விசாரணையொன்று நடைபெறுமென்றும் தெரிவித்தார். உள்துறையமைச்சர் பேசியபோது இந்தச்சம்பவம் குறித்து கவலையடைவதாக குறிப்பிட்டதோடு மன்னிப்பும் கோரினார்.

தாக்குதலுக்குள்ளான ஆர்ப்பாட்டக்காரர் எவரும் சாகவில்லையென்றும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

## இளம் பெண்போல் வேடம் போட்ட எம். எல். ஏ.

சென்னை, ஏப். 7

கடந்த வாரம் 2 நாட்களாகச் சென்னையில் அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் விளையாட்டுப்போட்டி நடந்தது. போட்டியின் இறுதி நாளான நேற்று முன்தினம் நடந்த மாறுவேடப் போட்டியில் சுப்பராஜா என்ற எம். எல். ஏ. பெண் வேடம் போட்டு, நாகரிகமாக நடந்துவந்து முதற் பரிசைத் தட்டிக்கொண்டார். பெண் வேடத்தில் வந்த இவர் முதலமைச்சர் கருணாநிதியின் அருகில் போய் உராய்ந்துகொண்டு அமர்ந்தபோது அமைச்சர் நெடுஞ்செழியன், கவர்னர் உஜ்ஜல்சிங் உட்படப் பலரும் ஆரவாரம்செய்து மகிழ்ந்தார்கள். இரண்டாவது பரிசு வடநாட்டு சிங் மாதிரி வேடம் போட்டு வந்த திருமதி அலமேலு அப்பாத்துரைக்குக் கிடைத்தது. 3வது பரிசு பால்காரர் வேடம் போட்ட மேல்சபை உறுப்பினர் திரு. ராகவானந்தத்திற்கு கிடைத்தது.

அடுத்து நடைபெற்ற பெண்களுக்கான இசை நாற்காலிப் போட்டியில் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்துவுககு முதற் பரிசு கிடைத்தது. 2வது பரிசு சட்டமன்ற அங்கத்தவர் திருமதி குப்பம்மாளுக்கு கிடைத்தது.

கயிறிழுக்கும் போட்டியில் புலவர் கோவிந்தன் அணியினர் முதற்பரிசு பெற்றார்கள். அமைச்சர் வேழவேந்தன் அணியினர் ஆறுதல்பரிசுபெற்றார்கள். குண்டு வீசும் போட்டியில் ஆறுதற் பரிசு அமைச்சர் நெடுஞ்செழியனுக்கு கிடைத்தது. சட்டி உடைத்தல் போட்டியில் முதற்பரிசு திரு. மேத்தாவுக்கு கிடைத்தது. பூப்பந்து போட்டியில் அமைச்சர் மாதவன் அணிக்கு முதற் பரிசு கிடைத்தது.

## 280 கார் என்ஜின்கள் கைப்பற்றப்படடன

கோட்டை, செவ்.

சமீபத்தில் சுங்கப்பகுதியினர் 280 கார் என்ஜின்களை கைப்பற்றியுள்ளனர். இந்த கார் என்ஜின்கள் லொறி என்ஜின்கள் இறக்குமதி செய்வதாகக் கூறி இறக்குமதி செய்யப் பட்டுள்ளனவாம்.

புதிய விதிகளின்படி கார் என்ஜின்கள் இறக்குமதி செவம்தற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. லொறிச் சேவை வாழ்க்கைத் தரத்தைக் குறைப்பதினால் லொறி என்ஜின்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. சுங்க அதிகாரிகள் இந்த் 280 என்ஜின்களும் 'லொறி' என்ஜின்களல்ல லொறி என்ஜின்களென்ற பெயரில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள கார் என்ஜின்களாகும் எனத் தெரிவித்துள்ளனர்.

இறக்குமதி கட்டுப்பாட்டதிகாரிகளும் சுங்க அதிகாரிகளும் இந்த 280 என்ஜின்கள் இறக்குமதி சம்பந்தமான சகல தஸ்தாவேஜுகளையும் இதற்கு முன்னைய இறக்குமதி தஸ்தாவேஜுகளையும் ஆராய்ந்துவருகின்றனர்.

## இப்பகுதிக் கிறிஸ்தவருக்கு தனி சேமக்காலை

மாவிட்டபுரம், செவ்.

காங்கேசன்துறை, ஊறணி கிறிஸ்தவர்களுக்கு தனியாக ஒரு பிரேத அடக்கச்சாலை அமைப்பதற்கு காணி சுவீகரிப்பதென உள்ளூராட்சி அமைச்சு முடிவு செய்துள்ளது.

காங்கேசன்துறை பட்டின சபை எல்லைக்குட்பட்ட ஊறணி, தையிட்டி, மாங்கொல்லை, மன்னிகுப்பை ஆகிய இடங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்களுக்கு பொதுவானதாக அமைந்திருந்த சேமக்காலை சிறியதாக இருந்த காரணத்தால் பரந்த ஒரு பிரேத அடக்கச்சாலை வேண்டும் என ஊறணி புனித அந்தோனியார்கிராம முன்னேற்றச்சங்கம் காங்கேசன்துறை பிரதிநிதி திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் மூலம் உள்ளூராட்சி அமைச்சை கோரியிருந்ததன் பயனாக நிதி ஒதுக்கப்பட்டு காணி சுவீகரிக்கப்பட இருப்பதாகத் தெரிகின்றது.

இதற்கான காணியை யாழ். உள்ளூராட்சி சிரேஷ்ட அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர். இப்படியான பிரேதசாலை நிறுவவேண்டும் என முன்பு காங்கேசன் துறைப் பட்டினசபை தீர்மானம் நிறைவேற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### உதவுங்கள்

கோட்டை, செவ்.

உலகெங்கும்சுகாதாரதினம் நேற்றுக்கொண்டாடப்பட்டது. இலங்கையில் புற்றுநோய் ஒழிப்புத்தினமாகக் கொண்டாடப்பட்ட இத்தினத்தில் புற்றுநோய் நிவாரணநிதி சேர்க்க இக்கமும் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை புற்றுநோய்ச் சங்கத்தின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிதிக்கு தாராளமாக உதவி செய்யுமாறும் புற்றுநோயினால் பீடித்து துன்புறும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு உங்கள்உதவிபயன்படும்என்றும் சங்கத்தலைவர் திரு டி எவ் டி எஸ் குணவர்த்தன கேட்டுக் கொண்டுள்ளார்.

# 'அரசியல் உராய்வுகளைத்தடுக்க அண்ணு கண்டுபிடித்த எண்ணை'

சென்னை, ஏப். 7

இங்கே தயாராகும் எண்ணை இயந்திரங்களின் உராய்வுகளைத் தடுப்பதற்கு பயன்படுத்தப்படுவது போலவே அரசியல் உலகிலும் அறிஞர் அண்ணுவும் காந்தியும் ஓர் எண்ணையைக் கண்டுபிடித்து அங்கு நிகழும் உராய்வுகளைத் தடுத்துவந்தனர். அந்த எண்ணைதான் அரசியல் பண்பாடு இதை ஒரு மாநிலமோ ஒரு கட்சியோ பயன் படுத்துவதால் பயனில்லை அனைத்துமாநிலங்களும் பயன்படுத்தவேண்டும். அனைத்துக் கட்சிகளும் பயன்படுத்தவேண்டும்.

தமிழக முதலமைச்சர் கருணாநிதி இங்குள்ள தண்டையார் பேட்டையில் இந்திய எண்ணை நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட ஒரு கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான எண்ணைத் தொழிற்சாலையைத் திறந்து வைத்துப்பேசுகையில்இவ்வாறுகுறிப்பிட்டார்.

டில்லி மத்திய அரசின் பெற்றோல் ரசாயன அமைச்சர் டாக்டர் திரி குணசென் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில்இந்த எண்ணைத் தொழிற்சாலைத் திறப்பு விழாவிற்கு தலைமைதாங்க வந்திருக்கும் அமைச்சர் திரிகுணசென் தானும் ஓர் எண்ணையாக மாறி எங்களுக்கும் மத்திய அரசுக்கு மிடையில் ஏற்படும் உராய்வுகளைத் தடுப்பதற்குபாடுபட வேண்டும் எங்கள் மாநிலத்திற்கு இயன்றளவு தொழிற்சாலைகளைப் பெற்றுத் தரவேண்டும் என்று கூறினர்

டாக்டர் திரிகுணசென் தனது தலைமையுரையில் இந்தியாவிலே இயந்திரங்களின் உராய்வுகளைத் தடுப்பதற்கு முதன்முதலாக அமைக்கப்படும் தொழிற்சாலை இது தானென்றும், தமது பதவிக்காலத்தில் இன்னும்பல தொழிற்சாலைகளை அமைப்பதற்கு உதவுவதாகவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எண்ணெய் இல்லாமல் விளக்கெரியாது, அது போலவே கடவுளில்லாது மனிதன் வாழமுடியாது, எல்லா மனிதர் பக்கமும் கடவுள் இருக்கிறார். ஆனால் எல்லா மனிதரும் கடவுள் பக்கம் இருப்பதில்லை, இதுவே அவர்கள் துன்பப்படுவதன் காரணம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 26-ந் திகதி (8-4-70)


## மின்சாரத் தடை

யாழ்ப்பாண நகரில் அடிக்கடி மின்சார விநியோகம் தடைபடுகிறது. சில இடங்களில் மின்மினிப் பூச்சிபோன்று வெளிச்சம் நிலவுகிறது. சில இடங்கள் இருளில் மூழ்கிவிடுகின்றன. மாநகரசபையிடம் கேட்டால் "நாங்கள் என்ன செய்வது, சுன்னாகம் மின்சாரநிலையத்திலிருந்துதானே எங்களுக்கு மின்சாரம் கிடைக்கிறது. அங்கு கோளாறு ஏற்பட்டதும் இங்கு மின்சாரவிநியோகம் தடைப்படுகிறது'' என்கிறது. சில சமயம் அரசாங்க மின்சார இலாகாவிடம் கேட்டால் 'மாநகரசபையைக் கேளுங்கள்' என்று சொல்வார்கள், மாநகரசபையின் மின்சாரப் பகுதியினரிடம் கேட்டால் 'அரசாங்க மின்சார இலாகாவிடம் கேளுங்கள்' என்று பதில் வரும். மொத்தத்தில் பாதிக்கப்படுவது பொது மக்கள் தான்.

யாழ்ப்பாண நகரில் சுமார் ஒன்பது 'டிரான்ஸ் போர்மர்கள்' இருக்கின்றன. இவற்றில் சில கூடுதலான மின்சக்தியை விநியோகிக்கின்றன. வேறு சில மிகக் குறைந்த மின்சக்தியை விநியோகிக்கின்றன. கூடுதலான மின்சக்திவிநியோகம் செய்யும் டிரான்ஸ்போர்மர்கள் இருக்கும் இடங்களுக்குச் சமீபத்திலுள்ள குறைந்தளவு மின்சக்தியை விநியோகம் செய்யும் 'டிரான்ஸ் போர்மர்கள்' சிலவற்றை ஒருங்கிணைத்து கூடுதலான மின்சக்தி விநியோகிக்கும் பகுதிகளுக்கு விநியோகம் செய்யமுடியாதா? இவ்விதம் செய்தால் அடிக்கடி மின்சார விநியோகம் தடைப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியாதா?

மஸ்கெலியஓயாத் திட்டம் நிறைவேறியதும் நாடு முழுவதும் மின்சாரம் கிடைக்குமென்றும் தேவைக்கதிகமாக உற்பத்தியாகும் மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்பதற்கு முயற்சிசெய்யப்படுகிறதென்றும் அரசாங்கம் பெருமையுடன் கூறிக்கொள்கிறது. மஸ்கெலிய ஓயாத் திட்டம் வரட்டும். ஆனால் அதுவரை சுன்னாகத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தைச் சரியானமுறையில் விநியோகித்துப் பயன்படுத்தக்கூடாதா? அரசாங்கத்தின் மின்சாரசபை இதில் சிறிது அக்கறைசெலுத்த வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களும் இதுவிஷயத்தில் அடிக்கடி தூண்டுதல் அளிக்கவேண்டும்.

## அமைதி வேண்டும்

தேர்தல் நெருங்க நெருங்க பிரசாரம் சூடு பிடிக்கிறது. அபேட்சகர்கள் தங்களுக்குத்தான் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையில்தான் தேர்தலில் போட்டியிட முன்வருகிறார்கள். தங்கள் வெற்றிக்காக எதைஎதையெல்லாம் செய்யமுடியுமோ அதை யதையெல்லாம் செய்கிறார்கள். அபேட்சகர்களை விட அவர்களின் ஆதரவாளர்களும் அவர்களுக்காக வோட்டுத்தேடும் தொண்டர்களும் தங்கள் அபேட்

என்றாலும் பொதுமக்களின் உணர்ச்சி வெறியாக மாறி வன்முறைச் செயல்களில் ஈடுபடக்கூடிய முறையில் பிரசாரம் செய்யாமல் அமைதிகெடாத முறையில் பிரசாரம் செய்யப்படவேண்டும்.

சமீபத்தில் சாவகச்சேரித் தொகுதியிலும் உடுப்பிட்டித் தொகுதியிலும் நடந்த சில சம்பவங்களுக்கு தேர்தல் பிரசாரம் தான் பின்னணியாக இருந்ததெனக்கூறப்படுகிறது.

ஆட்சி மன்றத்தில் சாதித்தது என்ன? [4]

# திருமலை பறிபோகாமல் தடுத்தது நாங்களே!

கோப்பாயை அடுத்து, உடுவிலைச் சந்திபோம் என்றெண்ணி, உடுவில் தர்மலிங்கத்துக்குப் 'போன்' செய்தபோது, எந்தவிதத் தயக்கமுமின்றிப் பேட்டிக்கு இசைந்தார்.

எனக்குச்சிரமம்தர விரும்பாது, யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சித் தலைமை அலுவலகத்தில் சந்திப்போமே என்று நேரம் குறித்துச் சொல்லியதோடு குறித்த நேரத்தில் தவறாமல் அலுவலகத்தில் தயாராக இருந்தார்.

"தேர்தல் வேலைகள் எல்லாம் எப்படி இருக்கிறது? 'கன்வசிங்'போகவில்லையா?'' என்று சம்பிரதாயக்கேள்வியொன்றோடுஆரம்பித்தேன்.

'ஓ, நன்றாகத்தான் இருக்கிறது. எனது மனைவி வீடு வீடாகச்சென்று வாக்காளர்களைச் சந்திப்பதில் ஈடுபட்டிருக்கிறார். நானும் போய்க்கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, பேட்டிக்கு நான் தயார் என்ற தோரணையில், அடுத்த கேள்விக்காக என்னை நோக்க, நான் 'உங்கள் ஐந்தாண்டு காலச் சாதனைகளை அவிழ்த்து விடுங்களேன்' என்றேன்.

### ஐந்து அல்ல பத்து

'நான் உடுவில் தொகுதியின் ஆட்சிமன்றப் பிரதிநிதியாக ஐந்தாண்டுகள் அல்ல, பத்தாண்டுகள் தொடர்ந்து பதவி வகித்திருக்கிறேன் எனவே, நான் இந்தப் பத்தாண்டு காலத்தில் செய்த சேவைகளை விபரமாகச் சொல்வது சற்று கடினம்தான் என்ற பூர்வ பீடிகையிடன் ஆரம்பித்தார் உடுவில் தர்மலிங்கம்.

உடுவில் தர்மலிங்கம் துடிதுடிப்பானவர் துணிச்சல் மிக்கவர் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களில் இடதுசாரிச் சோஷலிஸ முகாமிற்குள் ஊடாடி, ஒன்றிணைந்து பழகி அவர்களிடமும் நற்பெயர் எடுத்தவர். ஆட்சி மன்றத் தூதுக்குழுவில் அங்கம் வகித்து, சோஷலிஸ, கம்யூனிஸ நாடுகள் பெரும்

[illegible]

கிரஸ் எம். பிக்களை குறிப்பாக வவனியாச் சிவசிதம்பரத்தைசிரித்துக்கொண்டே சாடி, அவர்களது கோபத்தைக் கிளறிவிடுவதில் உடுவில் தர்மலிங்கத்தார் தனி ஆனந்தம் காண்பவர்.

ஆனால் ஒன்றுமட்டும் சொல்லலாம். இன்னமும் அரசாங்கத்தோடு ஒட்டிக்கொண்டிருப்பவர்கள் தத்தம் தொகுதிக்குச் செய்திருப்பதிலும் பார்க்க, நான் எனது தொகுதிக்குக் கூடச் செய்திருக்கிறேன். இவ்வாறு தொடர்ந்து தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகளான இரு சிவசிதம்பரங்களின் தொகுதிகளில் நிறைவேறியுள்ள திட்டங்களோடு, தனது தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களை ஒப்பிட்டு அவற்றிற்கிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சுட்டிக்காட்டி நானே அதிகமாகச் சாதித்திருக்கிறேன் என்று நிரூபிக்க முயன்றதோடு, தமிழ்க்காங்கிரசாரை வலிய வம்புக்கு அழைக்கும் பணியில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டார்.

### உடுப்பிட்டி, வவுனியாத் தொகுதிகள்

"உதாரணமாக உடுப்பிட்டித் தொகுதியில் 45,000 ரூபாய் மின்சாரத் திட்டம் தான் சாத்தியமாகியுள்ளது ஆனால் எனது தொகுதியில் -சண்டிலிப்பாயில் சுமார் ஒரு லட்சம் பெறுமதியான மின்சாரத் திட்டம் நிறைவேறியுள்ளது.

அத்தோடு பொது மராமத்து இலாகா, தபால் தந்தி இலாகா மான்யங்களில் வவுனியாத் தொகுதிக்காக 40, 50 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், டெலிபோன் வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் அத்தொகுதியின் ஆட்சி மன்ற உறுப்பினர் (திரு. ரி. சிவசிதம்பரம்) கூறியுள்ளார்'' -நான் என நினைத்துக்கொண்டிருந்தேன்.

உடனே திரு. தர்மலிங்

ஆட்சிமன்றத்தில் சொல்லியிருக்கிறார். வேண்டுமானால் ஹன்ஸாட்டை எடுத்துப் பாருங்கள் -அதில்அப்படியே இருக்கிறது. ஆனால் எனது பத்தாண்டு காலப் பதவியில் சுதுமலை ஆனைக்கோட்டை ஏழாலை குப்பிளான் கந்தரோடை சங்குவேலி மானிப்பாய் சோதிவேம்படி நவாலி பகுதிகளில் சுமார் நாலரை இலட்சம் -(இலட்சத்தை அழுத்தம் திருத்தமாக அடித்துச் சொல்கிறார்) ரூபா பெறுமதியான கிராம சபை றோட்டுகளுக்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு முடிவேறிவிட்டன.''

அடுத்தும் வவுனியாச் சிவசிதம்பரத்தை விட்டேனபார் என்று மீண்டும் ஆரம்பித்தார். "வவுனியாத் தொகுதியில் ஒரேயொரு உப-தபாற் கந்தோருக்குத்தான் டெலிபோன் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதாக அந்தத் தொகுதி உறுப்பினர் குறைபட்டிருக்கிறார். இதுவும் ஹன்ஸாட்டில் இருக்



கிறது. உடுவில் தொகுதியில், தாவடி உப-தபாற்கந்தோருக்கு டெலிபோன் வசதி கொடுப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை இன்னும் சில வாரங்களில் முடிந்துவிடும் நிலையிலிருக்கிறது. உடுவில் தொகுதியில் 1969ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இரு உப-தபாற் கந்தோர்களைத் தவிர மற்ற எல்லா உப தபாற் கந்தோர்களுக்கும் டெலிபோன்வசதிகள் இருக்கின்றன என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ளமுடியும்.''

"வடக்கு கிழக்கு மாகாணத்திலேயே, 1969ம்ஆண்டில் புதிய டெலிபோன் வசதி தாவடி உப-தபாற் கந்தோருக்கு மட்டுமே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.''

கே: இந்தச் சாதனைகள் எல்லாம் 1965ம் ஆண்டு தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி அங்கம்வகித்த காலத்தில்சாதித்தவைகளா? அதற்கு முன்புள்ளவைகளா?

"1965க்குப் பின் ஏற்பட்டதுதான்'' என்பதைச் சற்றுத் தயக்கத்துடனேயே ஒப்புக்கொண்டார்.

கே: தேசிய அரசாங்கத்தின் காலத்திலா அதற்கு முன்னைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கக் காலத்திலா உங்கள் தொகுதிக்கு அதிக நன்மை கிடைத்திருப்பதாகக் கருதுகிறீர்கள்?

ப: இந்த அரசாங்கத்தின் கீழ்த்தான் அதிக நன்மை நிகழ்ந்திருக்கிறது ஆனால்கல்வியைப் பொறுத்தவரையில் பாடசாலை சம்பந்தமாக இவர்கள் செய்தது குறைவுதான்.

கே: உங்கள் தொகுதியில் உள்ள படித்த வாலிபர்கள் பட்டதாரிகள் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க நீங்கள் எந்தவிதத்தில் முயற்சித்துள்ளீர்கள்?

ப; கொண்டக்டர், மாணவ ஆசிரியர் இப்படி

### வஞ்சம் தீர்க்க முயலவில்லை

ஆனால் நான்தீவிர முயற்ச்சிஎடுத்து- வஞ்சம் தீர்ப்பதற்காக அரசியல் காரணங்களுக்காக ஒரு தமிழனுக்குக் கிடைக்கவேண்டிய நியமனத்தை இன்னொருதமிழனுக்கு பறித்தெடுத்துக் கொடுக்கவில்லை.

அடுத்து பட்டதாரிகள் மத்தியில் நிலவும் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப்பற்றி, ஆழ்ந்த அக்கறையுடன் ஆணித்தரமாக எடுத்துக் கூற விழைந்தார் திரு. வி. தர்மலிங்கம்.

1969 ஆகஸ்ட் 10-ம்திகதி ஆட்சிமன்றத்தில் நடந்த விவாதத்தில், பட்டதாரிகள் வேலையில்லாப் பிரச்னைபற்றி தான் பேசியதை'ஹன்சாட்' ஏட்டிலிருந்து ஆதாரபூர்வமாகச் சுட்டிககாட்டி, தான் மூன்றம்சத்திட்டமொன்றை முன்வைத்ததாகவும், அந்த மூன்றம்சத் திட்டத்தின் அடிப்படையில் ஆட்சியாளர் தீவிரமாகச் செயற்பட்டிருந்தால் பட்டதாரிகள் பிரச்னை முற்றாகத் தீர்ந்திராவிட்டாலும் இந்நேரம் பெருமளவு தீர்க்கப்பட்டிருக்கும் என்றார்.

சிங்களப் பாடசாலைகளில், விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது; வட மாகாணத்திலேயோ விஞ்ஞானப்படிப்புப்படித்த பட்டதாரிகள் பலர் வேலையில்லாதிருக்கின்றனர். எனவே இவர்களுக்குக் சிங்களப்பயிற்சியளித்து, சிங்களத்தில் போதிக்கத் தமிழ்ப் பட்டதாரிகளை அனுப்பி வைக்கலாம். இது, இவரது மூன்றம்சத்திட்டத்தில்1வது அம்சம்.

யில் மாற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை என்ற ஒரு விரக்தி மனப்பான்மை,தமிழ்மக்கள் மத்தியில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டிருப்பதாக நான் சொல்கிறேன்- நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

ப :நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். நீங்கள் சொல்வது சரியென்றால் தமிழரசுக்கட்சிக்கு இவ்வளவு அமோகமான ஆதரவு கிடைக்காது.

கே: 'தமிழுரிமை, மொழியுரிமை என்பது எல்லாம் அடிப்படையில் பொருளாதாரப் பிரச்னைகள்தான். சோஷலிஸ சமத்துவ சமுதாயம் மலர்ந்தால், இந்தப்பிரச்னைகள் எல்லாம் தானாகத் தீர்த்துவிடும்' என்று இடதுசாரிகளில் சிலர் சொல்கிறார்களே. உங்கள் பதில் என்ன?

ப: செக்கோஸ்லேவேக்கியாவில், 20 ஆண்டுக்கும் மேலாக,சோஷலிஸம் ஆட்சி செலுத்தியும்,அங்கே இனப் பிரச்னை தீரவில்லை என்பதிலிருந்தே தெரியவில்லையா இது பிழையான வாதம் என்று.

### திருமலை பறிபோகுமா?

கே: திட்டமிடப்பட்ட அரசாங்கக் குடியேற்றத்தை தமிழ்ப்பகுதிகளில் தடுத்து நிறுத்திவிட்டோம் என்று சொல்கிறீர்கள் ஆனால் திருமலை பறிபோகப்போகிறது; வவனியாவில் சிங்கள வாக்காளர் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கிறது, என்று கூறப்படுகிறதே.

ப: திருமலையில் சிங்கள வாக்காளர் தொகை அதிகரித்திருக்கிறது என்று கூற

— பெரி. சுந்தரலிங்கம் —

சோவியத் யூனியனிலுள்ள லுமும்பாப் பல்கலைக்கழகத்தில் ஆறே மாதத்தில் ரஷ்ய மொழிப்பயிற்ச்சி கொடுத்து பட்டப்படிப்புப் படிக்கும் அளவுக்குத் தயார் செய்துவிடுகிறார்கள் ஆதலால், சிங்கள மொழிப்பயிற்சி கொடுப்பது சிரமமானதல்ல என்பது இவரது வாதம்.

இரண்டாவதாக, வெளி நாடுகளில்ஆங்கிலம் அறிந்த பட்டதாரிகளுக்குவெளிநாடுகளில்வேலைவாய்ப்புதேடிக் கொடுக்க அரசாங்கம் நேரடியாகத் தீவிர முயற்சி எடுக்க வேண்டும் இப்பொழுது தனிநபர் முயற்சியின் பேரில் தான் வெளி நாடுகளில் வேலைவாய்ப்பு தேடிக் கொள்கிறார்கள்; அரசாங்கம் நேரடியாக முயற்சித்தால் பெரு நன்மை ஏற்படும் என்பது இவர் எண்

முடியாது திருக்கோணமலை மாவட்டத்தில் அத்துமீறிய சட்டவிரோத சிங்களக்குடியேற்றத்தைத் தமிழரசுக் கட்சி தீவிரமாக எதிர்த்து வெற்றிகரமாகத் தடை செய்திருக்கிறது.

திருமலை மாவட்ட அதிபருடன் காணிக்கமிஷனருடனும் நான் பல மாநாடுகளை நடத்தியிருக்கிறேன் இவற்றின் விளைவாக 1967 டிசம்பர் 28-ம் திகதி நடந்த மாநாட்டில், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், திருமலை எம். பி மாணிக்கராசாவும் கலந்து கொண்டோம். அரசாங்க அதிபர் திரு குணதீராவும், காணிக் கமிஷனர் திரு. வீரக்கொடியும் கலந்து கொண்டனர். அத்து மீறிக் குடியேறியவர்களை நிரந்தரமாக்க, அவர்களிடம் அரிசிப்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யுமோ அதையதையெல்லாம் செய்கிருர்கள். அபேட்சகர்களை விட அவர்களின் ஆதரவாளர்களும் அவர்களுக்காக வோட்டுத்தேடும் தொண்டர்களும் தங்கள் அபேட்சகர்களினதும் தங்கள் கட்சிகளினதும் திட்டங்களையும் கொள்கைகளையும் எடுத்துக் கூறிவருகின்றனர்; பிரசாரம் செய்கின்றனர். இதற்காக அபேட்சகர்களையோ அவர்களின் ஆதரவாளர்களையோ குறைகுற்றம் சொல்லமுடியாது.

சேரித் தொகுதியிலும் உடுப்பிட்டித் தொகுதியிலும் நடந்த சில சம்பவங்களுக்கு தேர்தல் பிரசாரம் தான் பின்னணியாக இருந்ததெனக்கூறப்படுகிறது.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதில் பொலிசாருக்குப் பொறுப்பிருந்தாலும் அவர்களுக்கு ஒத்துழைப்பளிப்பதிலும் அமைதியைப் பாதுகாப்பதிலும் பொதுமக்களுக்கும் குறிப்பாக அபேட்சகர்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் அதிக பொறுப்பும் கடமையுமுண்டு.

குள் ஊடாடி, ஒன்றிணைந்து பழகி அவர்களிடமும் நற்பெயர் எடுத்தவர். ஆட்சிமன்றத் தூதுக்குழுவில் அங்கம் வகித்து, சோஷலிஸ, கம்யூனிஸ நாடுகள் பெரும்பாலான வற்றிற்குச் சென்று திரும்பியுள்ளார். எதிர்க்கட்சியினரின் 'செல்லப்பிள்ளை' என்று சொல்வதுகூட பொருத்தம்தான்.

ஆட்சிமன்ற விவாதங்களின் போதும், தமிழ்க்காங்

அத்தொகுதியின் ஆட்சிமன்ற உறுப்பினர் (திரு. ரி. சிவசிதம்பரம்) கூறியுள்ளார்'' -நான் எதையோ நினைத்துக்கொண்டு சிரித்தேன்.

உடனே திரு. தர்மலிங்கம் ''நான் சும்மா சொல்லவில்லை. அது உண்மையா, பொய்யா என்பதுகூட எனக்குத் தெரியாது. ஆனல் 1969-70 வரவு செலவுத் திட்ட விவாதத்தில் அவரே



பர்கள் பட்டதாரிகள் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க நீங்கள் எந்தவிதத்தில் முயற்சித்துள்ளீர்கள்?

ப; கொண்டக்டர், மாணவ ஆசிரியர் இப்படியான நியமனங்களில் வேறு எந்தத் தொகுதிக்கும் குறைவாக எனது தொகுதி இருக்கவில்லை.

பொழுது தனிநபர் முயற்சியின் பேரில் தான் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு தேடிக் கொள்கிருர்கள்; அரசாங்கம் நேரடியாக முயற்சித்தால் பெரு நன்மை ஏற்படும் என்பது இவர் எண்ணம்.

மூன்ருவதாக, படித்த வாலிபர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் காணிகள் வழங்கி, கூட்டுப்பண்ணை நடத்த, புதிய விவசாய முறைகளைக் கடைப்பிடிக்க எல்லா வசதிகளும் அளித்து, கடனுதவியும் அளிக்கவேண்டும்.

கொண்டோம். அரசாங்க அதிபர் திரு குணதீராவும், காணிக் கமிஷனர் திரு. வீரக்கொடியும் கலந்து கொண்டனர். அத்து மீறிக் குடியேறியவர்களை நிரந்தரமாக்க, அவர்களிடம் அரிசிப் பங்கீட்டுப் புத்தகமிருந்து அவர்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பிலும் இருக்க வேண்டும் என்ற விதியைக் கடைப்பிடிப்பதாக அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

எனவே திருக்கோணமலை மாவட்டத்திலும் சிங்கள வாக்காளர் தொகை அதிகரிக்கிறது என்ற பீதிக்கு இடமில்லை, திட்டமிடப்பட்ட அரசாங்கக் குடியேற்றம் தமிழரசுக்கட்சியினரான எங்களால் தடுத்து நிறுத்தப்பட்டதே இதற்குக்காரணம்.

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 26-ம் திகதி [8-4-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க, வேலுப்பிள்ளை**

**மேஷம்-** கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம், எதிலும் ஏமாற்றம் தென்படும். அரசபயத்திற்கு இடமுண்டு. எதிலும் அடக்கத்துடனும் நிதானத்துடனும் இருக்கவும்.

**ரிஷிபம்-** பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பை பெறுவீர்கள். கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு. சிலருக்கு அதிர்ஷ்டலாபம் கிடைக்கலாம். சிறப்பானதினம்.

**மிதுனம்-** குறைகேட்கநேரிடும். கடமையில் தடை தோன்றும். நஷ்டத்திற்கு இடமுண்டு. நாவடக்கம் நன்று. உடல்நலிவு தோன்றும். பிணிக்கு இடம் கொடாது நடக்கவும்.

**கடகம்-** வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன்மதிப்பு கிடைக்கும். தாய்வழித்தனவரவுக்கும் இடம் உண்டு. கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும், அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். சுபதினம்.

**சிம்மம்-** தெளிந்தமனம். தெய்வசிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்தவாழ்வும் உண்டு. இறைநம்பிக்கையுடன் இல்லத்தில் அமைதி தவழும்.

**கன்னி-** துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும். அரசியல்வாதிகளாயின் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளவும். வரவிலும் தடைஉண்டு.

**துலாம்-** உள்ளத்தில் உவகைக்கூத்து, உறவினர்கள் வருகை, வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும். னதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். எதிலும் துமையைக்காண விரும்புவீர்கள்.

**விருட்சிகம்-** அவசரப்போக்கிஞல் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்வீர்கள். எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும். தவருனவழி மூலம் பணம் பாழாகும். முகமன் கூறுவோர் விடயத்தில் முன்எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**தனுசு-** உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்பு தென்படும். சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு. பெரியவர் ஒருவர் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர்.

**மகரம்-** அறவழியை நாடுவீர்கள். தெய்வசிந்தை மேலோங்கி நிற்கும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும். புண்ணிய யாத்திரை ஒன்றை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

**கும்பம்-** புதியகோணத்தில் இருந்து பொருள் வரவுக்கு இடம் உண்டு. துணிவையே துணையெனக்கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள். பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடிவரும்.

**மீனம்-** மனதில் விரக்திநிலைதென்படும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். கால்நடைகளிஞல் நஷ்டம் ஏற்படும். பூமிப் பிணக்குகளின் மூலம் வழக்குவிவகாரங்களிலும் மாட்டிக்கொள்ளநேரிடலாம்.

## அதிபர்கள், விசேஷ ஆசிரியர் பதவிகள்

# குறைந்த நியமனங்களால் கல்வித் தரம் பாதிக்கப்படும்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள முதலாந்தர பாடசாலைகளுக்கான விசேஷ ஆசிரியர்கள், அதிபர்கள் நியமனம் குறித்து வடபகுதி கல்விமான்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். குறிப்பாக விசேஷ ஆசிரியர் நியமனத்தில் நிலவும் பற்ருக்குறை குறித்து ஆசிரியர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது. பின்வரும் புள்ளி விபரங்கள் இந்த நிலைமையைத் தெளிவாக்கக்கூடும்.

1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும்போது யாழ்மாவட்டத்திலுள்ள உயர்தர சிரேஷ்ட பாடசாலைகளில் விசேஷ முதல்தர அதிபர் பதவிகள் 3-ம், முதல்தர அதிபர்கள் பதவிகள் 26-ம், முதல்தர விசேஷ ஆசிரியர் பதவிகள் 54-ம் நிரப்பப்படவேண்டியனவாக இருந்தன.

### விசேஷப் பதவிகள்

o அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதும் அதிபர்கள பதவியில் உள்ள சில வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. இறுதியாக இத்தகைய நியமனங்கள் 1967ம் ஆண்டே இடம்பெற்றன. ஆனல் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின்னர் பாடசாலைகளில் உள்ள விசேஷ ஆசிரியர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை.

o 1970-ம் ஆண்டு ஏப்பிரல் 1-ம் தேதியில் மேற்குறிப்பிட்ட 3 பதவிகளிலும் உள்ள வெற்றிடங்கள பின்வருமாறு:-

விசேஷ முதல்தர அதிபர் பதவிகள் —5.

முதல்தர அதிபர் பதவிகள்—14.

முதல்தர விசேஷஆசிரியர் பதவிகள்—28.

1960-ம் ஆண்டில் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் வேளையிலான தரஅடிபடையில்ஆகக் குறைந்தது 10 முதல்தர அதிபர் பதவிகளும், 26 முதல்தர விசேஷ ஆசிரியர் பதவிகளும் வெற்றிடங்களாக இருந்திருக்கவேண்டும். முதல்தர விசேஷ ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் 26-ம், 3 முதல்தர விசேஷ ஆசிரியர்களை முதல்தர அதிபர்களாக தற்போது நியமித்ததன் காரணத்தால் 29 ஆக உயர்ந்துளளது.

o 1968-ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் மேற்குறிப்பிட்ட அதிபர்கள, விசேஷ ஆசிரியர்கள பதவிகளுக்கான வண்ணப்பங்கள அரசாங்கத்தால் கோரப்பட்டன. 1969-ம் ஆண்டு ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இதற்கான நேர்முகப் பரீட்சைகளும் நடைபெற்றன. விளக்கமுடியாத காரணங்களால் இவ்வளவு காலமும் தாமதமாகி தற்போது முதல்தர சிரேஷ்டபாடசாலைகளில் முதல்தர அதிபர் பதவிகளுக்கு 6 பேரும், முதல்தர விசேஷ ஆசிரியர் பதவிகளுக்கு 3 பேரும் நியமனம் பெற்றுளளார்கள.

### பூர்த்திசெய்யவில்லை

o ஆரம்பத்தில் இங்கு தரப்பட்டுளள புள்ளிவிபரங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது தற்போதைய இந்த நியமனங்கள் பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வனவாகவோ அல்லது பாடசாலைகளின் ஆசிரியர்களின் ஆர்வத்தைப் பூர்த்திசெய்வதாகவோ அமையவில்லையென்பது தெளிவாகிறது.

சிரேஷ்ட பாடசாலைகளின் அதிகரிப்பு, உயர் வகுப்புக்களின் விஸ்தரிப்பு, சமீப காலத்தில் பாடசாலை முறைகளில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் ஆகியவற்றிஞல் அதிபர்கள் உப அதிபர்கள் தலைமை ஆசிரியர்கள் ஆகியோருக்கு மேலதிக பொறுப்புக்கள் ஏற்பட்டுள்ளன அதிபர்கள் விசேஷ ஆசிரியர்கள் பதவி உயர்வுகள்மறுக்கப்பட்டால் அல்லது தாமதிக்கப் பட்டால் இச் சிரேஷ்ட பாடசாலைகளின்தரத்தைப் பேண முடியாது.

o விசேஷ முதல்தர அதிபர்களாகப் பதவிஉயர்வு பெற்ற ஆறு முதல்தர அதிபர்களதுபதவியுயர்வுநீண்டகாலமாக தாமதிக்கப்பட்டிருந்தது 6 பேர்களை மாத்திரம் மேற் குறிப்பிட்ட விஷேச முதல்தர அதிபர்களாக நியமித்தால் அநேக சிரேஷ்ட பாடசாலைகள் பதில் அதிபர்களின் கீழேயே தொடர்ந்து இயங்கவேண்டியுள்ளன. எனவே முதல்தர அதிபர்கள் பலரைநியமிக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது,

o பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க முன்னர் உதவி அதிபரும் மற்றும் இரு சிரேஷ்ட உதவி ஆசிரியர்களும் விசேஷ முதல்தர ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். இவர்கள்பாடசாலை நிர்வாகத்தில் அதிபருக்கு உதவி செய்தார்கள். சில நாடுகளில் சிரேஷ்ட உதவி ஆசிரியர்களுக்கு 7 அல்லது 8 விசேஷ ஆசிரியர் பதவிகள் வழங்கப்படுகின்றன. இவர்கள் பாடசாலை ஒரு பகுதியின் தலைவராகவும் மற்றும் விசேஷ பொறுப்புக்களையும் ஏற்று நடத்துகிருர்கள்.

o இலங்கையில் 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்னர் என்ன காரணம் பற்றியோ 1970-ம் ஆண்டு வரை விசேஷ ஆசிரியர் பதவிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை 1960-ம் ஆண்டு புள்ளி விபரத்தின் படி விசேஷ ஆசிரியர் பதவிகளுக்கான 29 வெற்றிடங்கள் இருந்தன. தற்போது இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கும். 700க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்தும் 10 ஆண்டுகளுக்குப் பின்னர்தற்போது 3பேர் மாத்திரம் முதல்தர விசேஷ ஆசிரியர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். இது இம் மாவட்டத்திலுள்ள சிரேஷ்ட ஆசிரியர்களுக்கு வெறுப்பையும் அதிருப்தியையும் உண்டு பண்ணியுள்ளது. யாழ் மாவட்டத்தின் உயர் கல்வியில் இது ஒரு பிரச்சினையாக உள்ளது.

யாழ் மாவட்டத்தின்கல்விமான்களும் பொதுமக்களும் இப் பிரச்னையை உடனடியாகத் தீர்ப்பதற்கான பரிகாரத்தை அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கிருர்கள். இப் பிரச்னை தீர்க்கப்படாவிடில் கல்வித்துறையில் முன்னேற்றமடைந்துள்ள இம் மாவட்டத்தின் சிரேஷ்ட பாடசாலைகளின் பயனும் தரமும் கடுமையாகப் பாதிக்கப்படும்.

— ஏ. ஈ. ரி. —

### இராணுவத்தின் அட்டகாசம்

கே: தமிழ்ப் பகுதியிலே இராணுவத்தினரின் அட்டகாசம் நாளாந்தம் அதிகரித்து வருவதாகப் புகார் கூறப்படுகிறது. இராணுவத்தினரின் அத்துமீறிய செயல்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் இரு பெரும் தமிழ்க் கட்சிகளின் மத்தியிலும் கருத்து வேறுபாடு கிடையாது. இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்கள்?

ப: நாங்கள்- தமிழரசுக் கட்சியினர் இராணுவத்தினரைத் தமிழ்ப்பகுதிக்கு அனுப்பியதை அன்றிலிருந்து இன்றுவரை எதிர்த்துக் கொண்டிருக்கிருேம். 1952ல் தான் முதன் முதலாக, இராணுவம் தமிழ்ப்பகுதிக்கு அனுப்பப்பட்டதாக, பிரதமரே சொல்லியிருக்கிருர் 1952ல் தமிழ்க்காங்கிரஸார் அதனை எதிர்த்திருந்தால், இந்தநிலைஏற்பட்டிருக்காது.

கே: வெறுமனே ஆட்சிமன்றத்தில் இராணுவத்தினரைத் தாக்கிப் பேசிவிட்டதோடு திருப்தியடைகிறீர்களே. இராணுவத்தை அகற்ற, என்ன தீவிர நடவடிக்கை மேற்கொண்டீர்கள்?

ப: (சிரித்துக்கொண்டே) இராணுவத்தினருக்கு எதிராகச் சத்தியாக்கிரகம் செய்யமுடியாது; போராட்டம் நடத்தமுடியாது யுத்தம் தான் செய்யவேண்டும். அதற்கு நாங்கள் ஆயத்தமாயில்லை!

### விரக்தி நிலையில் தமிழர்கள்

கே: இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? என்ற மனப்பாங்கில், எந்த அரசியற் கட்சியை அனுப்பிஞலும், தமிழ் மக்களுடைய நிலை

### வட இலங்கை ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றியதுடன் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களையும் சான்றுப்பத்திரங்களையும் வழங்கிஞர்.

பேச்சுப்போட்டிச்செயலாளர் திரு. வே. சின்னையா சம்பந்தப்பட்ட சகலருக்கும் நன்றி தெரிவிதுப் பேசிஞர் போட்டி முடிவுகள் வருமாறு:

மேற்பிரிவு ஆண்கள்: அ அருள்செல்வரத்தினம் யா. சென்சாள் ஞே. க. பாடசாலை மா வேதநாதன் நயிஞதீவு மகாவித்தியாலயம். க சோமாஸ்கந்தமூர்த்தி சேர் கனகசபைவித் பன்ஞலை.

மேற்பிரிவு பெண்கள்: சு விஜயராணி ஆனைக்கோட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய வித்தியாசாலை. சி பொ இராசநாயகி பண்ஞகம் மெய்கண்டான் வித்தியசாலை. சி செல்வமலர் கோண்டாவில் சைவத் தமிழ் வித்தியாசாலை

### இசைப்போட்டி

குழுப்பாடல்: பன்ஞலை சேர் கனகசபை தமிழ் வித்தியாசாலை. கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை.

ததனிப்பாடல்; சி மீனலோசனி கோண்டாவில் சை. த. வித்தியாசலை. செ செல்வமுானம் உடும்பராய் சை த வித்தியாசாலை. ப நந்தகுமார்கோண்டாவில்சை. த. வித்தியாசாலை.

### 6 இடங்களில் போட்டி

கோட்டை, செவ்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆறு தொகுதிகளில் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org